வீடும் வீடு பேறும்

இரா. இளங்குமரனார்

வீடும் வீடு பேறும்

இரா. இளங்குமரனார்

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101
தொலைப் பேசி : 0431-2685328

நூற்குறிப்பு

நூற்பெயர்	**வீடும் வீடு பேறும்**
ஆசிரியர்	இரா. இளங்குமரனார்
மொழி	தமிழ்
பொருள்	வாழ்வியல்
முதற் பதிப்பு	ஏப்பிரல் - 2014
பக்கம்	vi + 58 = 64
எழுத்து	13 புள்ளி
தாள்	13.7 வெள்ளை மேப்லித்தோ
அளவு	1/8
படிகள்	1100
விலை	உருவா : 50/-
உரிமை	ஆசிரியர்க்கு
வெளியீட்டுப் பொருளுதவி	முனைவர் அ. ஆறுமுகனார் - சாரதையார் நிறுவிய பாவேந்தர் பதிப்பக அறக்கட்டளை, திருமழபாடி, அரியலூர் மாவட்டம்.
நூலாக்கம்	"தி பிரிண்டிங்கு அவுசு" திருச்சிராப்பள்ளி - 23

நூல் கிடைக்குமிடம் :

- **திருவள்ளுவர் தவச்சாலை**
  அல்லூர் 620 101, திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
  தொலைப்பேசி எண் : 0431 - 2685328

இலை இரட்டை, பூவிரட்டை

வீடு - புறவாழ்வில் இருந்து விடுதலை பெற்ற அகவாழ்வு

வீடுபேறு - அகவாழ்வில் இருந்து பேரா இயற்கை பெற்ற நிறைநிலையாம் இறை நிலை வாழ்வு!

இரண்டன் இடங்களும் வேறு வேறு அல்ல! இலை இரட்டை, பூவிரட்டை போல்வன.

இரண்டும் நாம் வாழும் - வாழ்ந்து சிறக்கும் - நிறை நிலை வீட்டிலேயே ஆம்!

அதற்கு மறு தலையாம் பிறப்பும் - தற்கேடும் - குடும்பக்கேடும் வீட்டிலேயே நாமே ஏற்படுத்திக் கொள்ளும் நிரய - நரக - வாழ்வாம்!

வீடு பேற்று இன்ப வாழ்வும், வீடு பேறற்ற துன்பவாழ்வும் எங்கோ எங்கோ அமைந்தவை அல்ல!

இரண்டும் நம் கூட்டுள் பிறந்து - உலவி - சிறந்தோ சிறப்பற்றோ - நாம் வாழும் வீட்டிலேயே அமைந்தவை என்பதை விளக்கும் சிறு சுவடி இது.

இச்சுவடி 34 குறுங்கட்டுரைகளைத் தாங்கியது. இச்சுவடியை முழுதுறப்பார்த்து முறைசிறப்ப மெய்ப்புப் பார்த்தும் அச்சுப் பணியேற்றும் உதவிய பெருமகனார் திருமிகு. பி. தமிழகனார் ஆவர். நெருக்கடிச் சூழலிலும் நேயத்தால் மெய்ப்புப் பார்த்த பெருமகனார் முனைவர் கு. திருமாறனார் அவர்களுக்கும் திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்தார்க்கும் நன்றி மிகவுடையேன்.

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்

இரா. இளங்குமரன்

உள்ளடக்கம்

	பக்கம்
1. வீடு	1
2. வீட்டுள்	2
3. வீட்டாளுமை	4
4. ஒருவருக்கு ஒருவர்	6
5. ஒருவரை ஒருவர் புரிதல்	8
6. மக்கட் பேறு	9
7. மக்கள் வளர்ச்சி	11
8. மக்களை வளர்க்கும் முறை	13
9. பிள்ளையாகும் பெற்றோர்	15
10. நலம் பாராட்டல்	17
11. கலந்துரையாடல்	19
12. நயனார்ந்த நட்பு	21
13. விருந்து	23
14. விழா	25
15. வீட்டுத் தோட்டம்	27
16. வரவு செலவு	29
17. முதியோரை மதித்தல்	31

18. முதியோர் கடமை 32

19. வாழ்வியல் பதிவு 34

20. ஊர் அவை அமைப்பு 36

21. அலுவலர் கடன் 37

22. உழைப்பை ஊக்கல் 39

23. பொதுத் தொண்டு 40

24. தொழிலாளர் கடமை 42

25. செல்வர் கடமை 44

26. இரவலர் ஆக்காமை 45

27. இழிவு 47

28. ஆசிரியர் கடன் 48

29. எழுத்தாளர் கடமை 50

30. தாய்மொழி வழியே கல்வி,
வழிபாடு முதலியன 51

31. தாய்மொழி வழியே சடங்கு முதலியவை 53

32. துறவர் தொண்டு 54

33. தனிமை இனிமை 56

34. வீடு பேறு 57

❀❀❀❀❀❀

1. வீடு

வீடு என்பது என்ன?

விடுதலை அடைந்த உறைவிடம் வீடு!

எதில் இருந்து விடுதலை?

வெளி உலகில் இருந்து விடுதலை அடைந்த இடம்!

வெளி உலகம் என்பது எது?

சமய உலகம், சாதி உலகம், கட்சி உலகம், அரசியல் உலகம், தொழில் உலகம், போட்டி உலகம், பொறாமை உலகம், வஞ்ச உலகம், கொள்ளை உலகம் - இன்ன உலகம் வெளி உலகம்.

வேலை உலகம், பதவி உலகம், அதிகார உலகம், ஆணை உலகம், ஆணவ உலகம், திட்டு, வசை உலகம் என்னும் இன்னவும் வெளி உலகமே!

வீட்டு உலகம் என்பது எது?

பெற்றோர் உலகம், கணவன் மனைவி உலகம், மக்கள் உலகம், உற்றார் உறவு, சுற்றம் சூழல் உலகம் என்பவை வீட்டுலகம். அன்புலகம், அமைதி உலகம், இன்ப உலகம், விருந்துலகம், அடக்க உலகம், ஒழுக்க உலகம், ஒருமை உலகம், பொறுமை உலகம், உழைப்பு உலகம், உவகை உலகம் என்பவையும் வீட்டுலகமே!

வெளியுலகம் வேறு; வீட்டுலகம் வேறு!

வெளியுலகம் வீட்டுலகத்தினுள் வருதல் ஆகாது!

வெளியில் இருந்து வீட்டுலகுள் வரும் போது இல்லுறை தெய்வ உலகாக எண்ணி நுழையு முன் மிதியடியைக் கழற்றி முன்னே போட்டு விட்டுப் போவது போல், வீட்டுள் கணவனாக, மனைவியாக, தந்தையாக, தாயாக, மகனாக, மகளாக, பாட்டனாக, பாட்டியாக, பேரனாக, பேர்த்தியாக, கொண்டவராக, கொடுத்தவராக, அறிவராக, அறவராக, அருளராக, அரணராக, துறவராகப் புகுதல் வேண்டும்!

"ஒருமை மகளிரே போல" என்று வள்ளுவர் கூறுவது போல, ஒரு முகப்பட்டு ஒன்றிய தன்மையராக ஒவ்வொருவரும் புகுதல் வேண்டும்!

பிரிவு, பிணக்கு, பிளவு, தன்னலம், தற்செருக்கு, தாழ்வு, உயர்வு என்பவை இல்லா உள்ள விரிவராகப் புகுதல் வேண்டும். விருந்தர் உறவர் முதலோர் புகுந்து வெளியேறும் போது, அவ்வீடு புதுப் பொலிவு கொண்டதாக உணரச் செய்து எப்பொழுது மீளக் காண்போம் என்னும் ஏக்கம் ஏற்பட இனியராய் விடை பெறல் வேண்டும்!

புகுந்த வீட்டால் அவர்க்குப் பெருமையும், அவரால் அவர் புகுந்த வீட்டுக்குப் பெருமையும் ஏற்படலே வருகையின் இருபால் பேறாக அமைய வேண்டும்.

❀❀❀

2. வீட்டுள்

வீட்டுள் புகுதல் பொலிவுமிக்க பூந்தோட்டத்துள் புகுதலாக ஒவ்வொருவர் உள்ளத்தும் உணர்வு உண்டாக வேண்டும். அவ்வுணர்வு அவர் இவர் என்னாமல் அனைவரிடத்தும் அமைந்து விளங்குதல் வேண்டும்.

வீட்டுள் 'நீ', 'நான்' என்னும் எண்ணத்திற்கு இடமே இல்லை. வீட்டுள் 'நாம்' என்னும் ஆட்சியும் 'நம்' என்னும் ஆளுமையும் சிறந்து விளங்க வேண்டும்.

சிறிதே பிரியும் வேலைச் செலவும், வெளியூர்ச் செலவும், வீட்டுக்குரிய நிறைவில் சற்றே குறைவு உண்டாவதாக ஒவ்வொருவரும் எண்ணும் பிரிவாக இருக்க வேண்டும்! "எப்பொழுது வருவார்" என்னும் நோக்குடையவராக ஒவ்வொருவரும் எதிர்பார்ப்பு உடையவராகச் செய்ய வல்ல நெஞ்ச உருக்கம், பெருக்கமாக இயல்பாக அமையத் தக்க உரிமை உறவு வேண்டும். வீட்டுப்பாரம் என்பது இருவர் குடும்பம் ஆயினும் இருபது பேர் உள்ள குடும்பம் ஆயினும், ஓரிருவர் பாரமாக இல்லாமல் அறிவறிந்த எல்லார் பாரமாகவும் இருக்க வேண்டும்! ஒரு மூடைத் தேங்காய் ஒருவர்

தலையில் இருப்பதற்கு மாறாக, ஒவ்வொரு தேங்காய் ஒவ்வொருவர் கையிலும் இருந்தால் சுமைப்பாரம் உண்டா?

‘இவ்வேலை இவரது’, ‘அவ்வேலை அவரது’ என்று இல்லாமல் ‘எல்லா வேலையும் எல்லார்க்கும்’ என்னும் நிலை உண்டானால் எவர்க்கும் சலிப்பு – பாரம் – போட்டி – பொறாமை ஏற்பட வாய்ப்பில்லை அல்லவா!

கூட்டாக அமர்ந்து ஒருவர்க்கு ஒருவர் பரிமாறி உண்ணும் ஊணே தனிச்சுவையாம். அறுசுவை எச்சுவை கூடிக் குறைந்து இருந்தாலும், உடனிருந்து உவகையாய்க் கலந்து பேசி உண்ணும் சுவை எண்ணும் சுவைகள் அத்தனைக்கும் மேம்பட்ட சுவையாம்!

ஆண் செய்யும் வேலை, பெண் செய்யும் வேலை;

ஆண் செய்யும் தொழில், பெண் செய்யும் தொழில்;

என வேறுபாடு இல்லாக் காலம் இது. இக்கால நிலை பால் பாராமல் எத்தொழிலும் எவ்வேலையும் எவர்க்கும் உரியது என்னும் காலம்!

இயற்கைப் பிறப்பமைவால் ஏற்பட்டதும், அவ்வியற்கை அமைவால் பிறப்பொடு வந்த சில உயர்மைப் பண்புகளும், ஒருவருக்கு ஒருவர் என்னும் பொதுமையறம் போற்றப்படும் இடத்தில் தலையும் காட்டாது! வாலும் நீட்டாது!

❀❀❀

3. வீட்டாளுமை

வீட்டுள் எனப் பொதுமை சொல்லி விட்டு, வீட்டாளுமை என்று வருவது முறையா எனின் முறையே என்பது மறு மொழியாம். அது பண்டையோர் அமைத்துக் காட்டிய பண்பாட்டு மரபுரிமைப் பேறாகக் கொள்ளத் தக்கதாம்.

இல்லாள், மனையாள் என்பது போல்,

இல்லான், மனையான் என்னும் வழக்கு உண்டா?

இல்லான் என்றால் நேர் பொருள் என்ன, வறியன் தானே!

ஆம்; இல்லாள் இல்லையேல் எத்தனை வகை வகை வளத்தன் எனினும் வறியனே!

இல்லாள் இருந்தால், எத்தனை எத்தனை வளமிலா வறியன் எனினும், உள்ளானே - உடையானே - உரியானே - உயர்வானே ஆம். அதன் சுருக்க வாய்மொழியே,

'இல்லது என்?' என்னும் வினாவும்,

'இல்லவள் மாண்பானால்' என்னும் விடையுமாம்!

வள்ளுவம் முச்சீரிலே வினா விடைகளை முடித்துக் காட்டியது!

இல்லத்தை ஆள்பவள் இல்லாள்

மனையை ஆள்பவள் மனையாள்

அவள் ஆட்சிக்குத் துணையாக இருப்பவன் கணவன்.

காதல் வாழ்வில் ஒருவனும் ஒருத்தியும், ஒத்தவர்கள் தாம்; தலைவன் தலைவியர் தாம். கற்பு வாழ்வில் தலைவிக்குத் தலைவனே துணை!

எப்படி?

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

அவள் நல்லாள்! தக்காள்! அவ்வாறே,

அவனும் நல்லான்! தக்கான்!

அப்படி வாய்க்கப் பெற்றால். அக்குடும்பமே - அவ்வீடே - இன்ப உலகம் என்னும் வீடு! அப்படி இல்லாத வீடு, பொல்லாத விலங்குகளும் நச்சுப் பாம்புகளும் வாழும் காடும், குடிசையுமாம், பொல்லாதது எனக் கண்டு வந்தவர் போலப் புகலும் நிரயமும் (நரகமும்) ஆம்!

"பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு"

என்பது வள்ளுவம். ஒத்து வாழும் வாழ்வே "மண்ணில் விண்" என்னும் வாழ்வு என்பதால் தான், இல்வாழ்க்கை நிறைவில்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்றார் தெய்வப் புலவர்.

❀❀❀

4. ஒருவருக்கு ஒருவர்

ஒருவருக்கு ஒருவர் என்பது ஒரு கணவனுக்கு ஒரு மனைவி என்பதா?

ஆம்! வள்ளுவ வழி அதுதான்!

போர்க்களத்தில் ஆண்மை (ஆளுமை) மிக்கானினும் மிக்கான்,

"பிறன்மனை நோக்காப் பேராண்மையன்"

நல்ல மனைவி - நயத்தகு பண்பு மனைவி,

"பிறர் நெஞ்சு புகாள்"

என்பதும் நம்மவர் பண்பாடு!

இருமனப் பெண்டிர் - பொருட் பெண்டிர் - என்பார் இருந்தமையால், தீண்டக் கூடாக் கள்ளொடும், ஆடக் கூடாச் சூதொடும் அவரை இணைத்து,

"இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு"

என்றது வள்ளுவம்.

முயற்சியைக் கெடுப்பவை இவை! முயற்சியாலாம் திருவைக் கெடுப்பவையும் இவை! சான்றோர் பழிக்கும் கயமையாயவையும் இவை! ஈன்ற தாயாலும் ஒப்ப இயலா ஒழுக்கக் கேடானவை இவை.

வள்ளுவர் அறவர்; சால்பர்; வழிகாட்ட வந்த ஒளியர்; அதனால் தொல்காப்பியர் நாளிலும், சங்கத்தார் காலத்தும் இருந்த பழமை என்பதற்காக விட்டு வைக்காமல், முள்மரங் கொல்வார் போல் இம்மூன்றையும் முளையிலேயே கிள்ளி எறியத் தூண்டுகிறார்.

கால் எங்கே? கண் எங்கே?

கால் வலிக்கக் கண்ணீர் வருகிறதே! கால்வேறு தலைவேறு என்று கண்ணுக்கு வேற்றுமை உண்டா? ஒருவனுக்கு ஒன்று என்றால், அவன் துணையாம் அவளுக்கும் அதுதான். ஒருத்திக்கு ஒன்று என்றால் அவள் துணையாம் ஒருவனுக்கும் அது தான்!

காதல் என்பது கூடு விட்டுக் கூடு பாய்தலாம்! அவனுக்காக அவள்! அவளுக்காக அவன்! ஒருவருக்காக ஒருவர்.

காதல் அறம் இருபாலும் கால் கொண்ட போதே 'ஒருவன்' ஒழிகின்றது. ஒருத்தி ஒழிகின்றது. இருவரும் ஒருவர் ஆகின்றனர். இரண்டு கண்களும் ஒரு பார்வை கொள்வது போல் இருவரும் ஒருவராய்க் 'கண்ணன்ன கேளிர்' என்றாகின்றனர்.

"ஒன்றன் கூறுஆடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை" (கலித்தொகை - 18)

என்பது ஒருவருக்கு ஒருவராம் நிலையிலேயே உண்டாகும்! ஒருவன் ஒருத்தி என்பவை ஒழியார் என்றும் 'ஒருவர்' ஆகார் என்பது ஒருதலையாம்!

❀❀❀

5. ஒருவரை ஒருவர் புரிதல்

ஒருவருக்கு ஒருவர் என்னும் உயிருரிமை உண்டாக வேண்டுமானால், ஒருவரை ஒருவர் புரிதல் – தெளிந்து தேர்ந்து புரிதல் – இல்லாமல் முடியாது! மணமுறை இருவகையாதல் வெளிப்படை.

காதல் மணம் என்பது ‘களவு’ என்பதாலேயே விளங்கும்.

உள்ளம் ஒன்றியதை முதற்கண் உயிர்த் தோழமையரும் அறியார். அவர்களும் முயன்றே அறிவர் என்னும் நிலையில் “உள்ளம் கவர் கள்வர்” அவர்!

அத்தன்மை இல்லாமல் ஒருவர் செய்யும் உதவிக்காக – இனிக்கப் பேசுவதற்காக – தரும் உறுதி மொழிக்காக – தோற்றம் செல்வம் அறிவு முதலாம் பொலிவுக்காக நேர்ந்த காதல் நேரிய காதலாக நிலைப்பதில்லை என்பது வாழ்வியல் உண்மை!

புரியத் தொடங்குமுன்னரே பிரியும் நினைவும் நிலையும் உளத்துள் ஒருபால் முளையிடும்! ஒரு சிறு குறை காணினும், தன் எதிர்பார்ப்புக்கு ஒரு சிறு மாறுபாடு தோன்றினும் ‘துள்ளித் தூண் முட்டுபவராய்’, சிற்றுணர்ச்சிச் சிலு சிலுப்புடையராய் இருப்பார் “சட்டி சுட்டது கைவிட்டது” என்னும் நிலையரேயாம்!

பொங்கிவரும் பாலும் நீரால் அமையும்! நீர்மை என்பது அதுவே!

பொங்கும் பாலைக் கண்டும் வெப்பைத் தூண்டுவார் புரிந்தவர் ஆவரா? பிரிபவர் ஆவரா?

புரிபவர் ஒருவர் உரையாடலில் எதிரிடார்! சொல்லுவ வெல்லாம் கேட்பர்! பொருந்தா உரையையும் மறுதலையையும் மறுத்துரையார் – சுட்டிக் காட்டிக், காட்டார்! அவர் நிலை, பேசியவரைச் சிந்திக்க வைக்கும்! பேசியதைக் கண்டு கொள்ளாமல் – வழக்கம் போல் செய்யும் கடமை, காட்டும் அன்பு குறையாமல் ஒரு நாள் இருநாள் செல்லட்டும்! பின்னர் நடப்பது வியப்பினும் வியப்பாய் அவரே அவரைப் புரியக் காட்டும் நிலை வெளிப்படும்! இப்புரிதல் ‘ஆண் – பெண்’ என வேறுபட்ட தன்று. ‘ஒருவரை ஒருவர்’ என்பதிலேயே வேறுபாடு ஒழிந்து விட்டதே!

அடங்கி இருத்தல் கோழைத் தன்மை அன்று!

அடக்கி வைத்தல் ஆண்மையும் அன்று! ஆண்மையாவது ஆளுமை!

ஒவ்வோர் ஆளுக்கும் அமைவுடைய தன்மையே ஆளுமையாம்!

நெய் > நேய் > நேயம் = அன்பு.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை"

"அன்பெனும் குடில்புகும் அரசு"

இவ்வள்ளலாரியம், வள்ளுவ அன்புடைமைப் பிழிவு! ஒருவரை ஒருவர் புரியச் செய்யும் ஊடகம் அன்பே. ஆதலாலே அறத் தொடக்கம் அன்புடைமை ஆயது வள்ளுவத்தில்!

❀❀❀

6. மக்கட் பேறு

இருவரையும் ஒருவராக்கும் இல்லற அன்பு பெரியதே. அப்பொழுது அவ்வளவு தான் என்றிருந்தால் விரிவுறாது. அது உறவாய் - சுற்றமாய் - ஊராய் - நாடாய் - உலகாய் - விரிவுற வேண்டும். அதற்கு வாய்த்த பேறு மக்கட் பேறு ஆகும்.

பெற்றோர் எல்லாம் பெற்றோர் அல்லர்

பிறந்தோர் எல்லாம் மக்களும் அல்லர்

பெற்றோர் ஒன்றாகிய ஒருமையாய் - உள்ளார்ந்த அன்புச் சுரப்பில் - அறிவறிந்த மக்களைப் பெற்றால், பெற்றோர் பெற்றோராக விளங்குவர். பிள்ளைகளும் பிள்ளைகளாக விளங்குவர். அறிவறிந்த அவர்கள் பெற்ற பிள்ளை, அப்பெற்றோரின் பண்பு நலச் சிறப்பால் பழிச்செயல் அறியாப் பண்புடைய மக்களாகி - உலகோர் பாராட்டும் உயர் மக்களாகத் திகழ்வர்.

கருக்கொள்ளல் என்பது உடல்உறவுப் பொருள் அன்று! உண்மை உருக்கம் குடிகொண்ட உயிர்ப் பொருள்! கருக் கொண்ட நாள்முதல் அதன் வளர்ச்சியும், அறிவும் பண்பும் விரிவும் கருதிய நோன்பு வாழ்வினராக உள்ளுள் திளைப்புற வேண்டும்.

கண்டதையெல்லாம் உண்பது, காதில் வருவதையெல்லாம் உள்வாங்குவது, வாய்வந்ததெல்லாம் பேசுவது, தேவையில்லாத

எண்ணங்களையெல்லாம் எண்ணுவது, தம்முள்ளும் பிறருள்ளும், பிணக்கு, பிளவு, போட்டி, பொறாமை என இருப்பது என்பவற்றின் நிழலும் படியாத நேரிய சீரிய நோன்பினராக விளங்க வேண்டும். அந்நோன்பே கருவை உருவாகச் செய்யும் போதே உயர் பிறப்பாகத் திகழவும் செய்யும்! அப்பிறப்பே அவலமிலா அருமைப் பிறப்பாக விளக்கமுறும்.

பெற்ற பின்னரும் வளரும் பருவத்தும் உடல் வளர்வும் உளவளர்வும் ஒன்றாய் வளர்த்த காட்சி கேள்வி உணவு உறவு ஊட்டவேண்டும். ஒதுக்க வேண்டுவ ஒதுக்கி ஒன்ற வேண்டுவ ஒன்றச் செய்யும் உயர்வு வேண்டும்.

உயிர்ப்பிறவி ஒவ்வொன்றையும் உள்வாங்கும் பிறவி; பெற்றோரை விடலறியா உறவில் பெருக்கமுறும் பிறவி என்பவற்றை உணர்ந்து உள்ளகம் உரிய வகையால் ஆசிரியராய் - வழிகாட்டியாய் விளங்கி வளர்த்து வளம் பெருகச் செய்ய வேண்டும்.

மாந்தப்பிறவி ஆறாம் அறிவுப் பிறவியாக அமைதல் பொதுநிலை; அஃது ஏழாம் அறிவு எட்டாம் அறிவு என ஏறும் பிறவி; ஏறாத நிலைக்கு ஏறும் பிறவி என்பதைப் புரிந்து கொண்டு உரிமைக் கடனாற்ற வேண்டும். அதனாலேயே, "தம் பொருள் என்ப தம் மக்கள்" என்றார் பொய்யா மொழியார்.

பொன்னையும் முத்தையும் மணியையும் வயிரத்தையும் போற்றித் தம் பொருள் எனக் கொள்ளும் ஆர்வ இயலை மடைமாற்றித் தம் பொருள் எனப்படுவது தம் மக்களே என்னும் போற்றுதலோடு வளர்ப்பதே பெற்றோர்கள் பிள்ளைகளுள் கரைந்து மூவரும் நால்வரும் ஒருவராகும் நிலை உண்டாகி விரிவடைகின்றது.

❀❀❀

7. மக்கள் வளர்ச்சி

மக்கள் வளர்ச்சி என்பதன் முதல் 'உடல் நலம்'. அதனால் தான் உடல் என்பதை 'முதல்' என்றனர். உடலாம் முதல் வாகாக அமையாமல், கைம்முதல், பைம்முதல், இருப்பு முதல், எடுப்பு முதல், உரிமை முதல், உடைமை முதல் என்பவை எவையும் முதலாகச் சிறப்புறுதல் இல்லை. இதனை உணர்ந்த பழந்தமிழ் இலக்கணர் உடலை 'முதல்' என்றனர்; **'முதலாகுபெயர்'** என உடலைக் கூறினர். ஒவ்வோர் உறுப்பும் சீராகச் செவ்விதாகக் காக்கப்பட வேண்டும் என்பதால், அதனைச் **'சினையாகு பெயர்'** என்றனர்.

'சினை' என்பது **உறுப்பு** என்பது மட்டுமன்று; ஆடு மாடு சினையாக உள்ளது என்றால் என்ன? அவை தம் உயிரோடு மற்றை உயிரொன்றையோ பலவற்றையோ தாங்கியுள்ளன என்பது பொருளாம். ஆதலால், 'முதல்' ஆகியது கொண்ட கருவே சினை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே அப்பெயரின் உள்ளீடாம்!

அரும் பொருள்கள் என நாம் மதித்துப் போற்றும் பொருளும், நம் அயர்வால் நம்மை விட்டுப் போய்விடுவது இல்லையா? வழிப்பறி வல்லாண்மை என்பவற்றுக்கு ஆளாகி ஒழிந்துபடுவது இல்லையா? அப்படியே நம் அரிய உறுப்புகளும் நம் கவனமிலா நிலையாலும், நிகழும் நேர்ச்சிகளாலும் ஊறுபட்டுப் போவது, கண்ணாரக் காண்பது தானே! ஆதலால், உளநலம் அறிவு நலம் சிறக்க உடல் நலமும் உறுப்பு நலமும் கருத்துடன் காத்துக் கொள்ளல் பெற்றோர் கடமையாம்.

சிறகு வலிமை உண்டாகி விட்ட பறவை, கூட்டை விட்டு வெளியேறவே துடிக்கும். கால் ஊன்றி விட்ட குஞ்சும் குட்டியும் வெளியேறிச் சென்று வரவே தவிக்கும். அவை வெளியேறினாலும் தாய்ப்பறவையும் தாய் விலங்கும் எவ்வளவு பாதுகாப்புச் செய்கின்றன.

கோழி பருந்தை நெருங்க விடுகிறதா? மயில், குஞ்சை மற்றது நெருங்க விடுகிறதா? நாயும் பூனையும் ஆவும் எருமையும் தம் குட்டிகளைப் பிற நெருங்க விடுகின்றனவா?

காட்டு விலங்காம் புலி தன் குட்டியைக் காக்கும் திறத்தைப்,

"புலி புறங்காக்கும் குருளை போல"

என்று உவமைப்படுத்தினான், **சங்கச் சான்றோன்.**

பேர்த்தியரை ஆற்றுக்கு அழைத்துச் செல்லும் பாட்டியரை, புறம் புறம் காக்கும் **சேம முது நடைப் பாட்டியாகக்** கண்டான் பரிபாடலான்!

"புறம் புறம் திரிந்த செல்வமே" என்று இறையைப் பாடினார் **மணிவாசகர்!**

"இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணி" எனச் **செல்வக் கடுங்கோ வாழியாதனைப்** பதிற்றுப் பத்துப் பாடியது!

"காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி"

என்று பாடினான் ஆட்சி செய்யும் முறைமை பற்றிக் கூற வந்த சங்கச் சான்றோன்! பெற்ற காலத்திலும், வளர்ச்சிக் காலத்தைப் பற்றிப் பெற்றோர் அக்கறை கொள்ளல் வேண்டும் என்பதை வலியுறுத்த இவை போதாவா?

❀❀❀

8. மக்களை வளர்க்கும் முறை

ஒரு செடி முளைத்தால் அதனை ஒருவர் விரல் நீட்டிக் காட்டினால் அது வளராது எனத்தடுப்பர். ஏன்? அதன் மென்மை, விரல்பட்டால் ஒடிந்து போகும் என்பதாலேயே ஆம். அத்தன்மை குழந்தைக்கும் தகும்.

தக்கார் அன்றிப் பிறர் கையில் ஒப்படைக்கப்பட்ட குழந்தை எதைப் பற்றும்? தக்கார் பொறுப்பில் உள்ள குழந்தை எதைப் பற்றும்?

சார்ந்ததன் வண்ணமாதல் இயற்கை இயங்கியல் கல்வி! பல்லி, கரட்டான், பச்சைக்கிளி, புலி, புள்ளிமான், தவளை என்பவை சார்ந்ததன் வண்ணம் இல்லையா? பச்சைப்பாம்பு, குச்சிப்பூச்சி, கறிவேப்பிலைப்புழு என்பவை நாளும் காண்பவை தாமே!

பச்சைக் குழந்தையைப் 'பச்சைமண்' என்பார்களே! நகம்பட்டாலும் விரல் வரி பட்டாலும் பட்டவை முத்திரையாகப் பதிந்து விடும் அல்லவோ!

குழந்தையை வளர்க்கும் பெற்றோர் இயல்பு, குழந்தை உள்ளத்தில் உரையில், செயலில் முத்திரையாகப் பதிந்து விடும்!

பச்சை அல்லது பிஞ்சு உளத்தில் பதிவாயது, வலிய பதிவாகி வாழ்நாளெல்லாம் நிலைத்து விடும்.

இளமையில் கல் என்னும் பாட்டி உரை, பட்டறிவின் உரை.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது 'வளை' என்பதாலேயே விளங்கிவிடும். வளையாவது மூங்கில்! இளமையில் வளையும் மூங்கில் முதுமையில் வளைதல் உண்டா? "வளைக்க வளைகின்ற வேய்" என்பது பாடுபொருள் இல்லையா? வளர்ச்சி என்பது வளர்க்கும் முறை சார்ந்தது. அதனால் தான் வாய்மை வள்ளுவம்

'ஒழுக்கம் உடைமை குடிமை'

என்றது.

தாய் தந்தை – பாட்டன் – பாட்டி – அக்கை அண்ணன் ஆயோர் குழந்தை வளர்ச்சி – அறிவு பண்பு நலம் ஆயவற்றுக்கு அரணமாக அமைந்தவர்

என்பதை உணர்ந்து நடத்தல் வேண்டும். அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வாராது என்பது போல், வேண்டா வழி - ஆகாவழி - கூடாவழி - உறவுக்கும் நட்புக்கும் இடமாக்கி விட்டு விட்டுப் பின்னே 'கெட்டு விட்டது' என்று பழிப்பவர், தம் குழந்தையைக் கெடுத்தவர் - கெடச் செய்தவர் - தாமே என்பதை உணர்வது இல்லை.

பெற்ற பிள்ளை முன்னர்ப் பெற்றோர் தங்களுக்குள் சண்டை - கலகம் - வசை - ஏசல் - எனக் கொண்டால் அவற்றைக் குழந்தை கற்பியாமலே கற்றுக் கொள்ளும் அல்லவா! தலைக்கு மேல் வேலை இருக்கலாம்! அதனைச் சொல்லித் தப்பித்தல் - தட்டிக் கழித்தல் ஆகாது.

குழந்தையை வீட்டுள் அரவணைத்து அக்குழந்தை நலம் பேணாமல் நம்பாடு நம் வேலை என்பதே குறியாக இருந்தால் வேறு துணையை நாடி வெளியே செல்வதைத் தடுக்க முடியாது! வெளியே விடக் கூடாது என்பது இல்லை. கூடத் தகாத கூட்டில் கூடி ஆடத் தகாத ஆட்டம் போடவும் நேரலாம் அல்லவா! அந்நிலையை அவன் கொண்டால் பின்னர் வீட்டுக் கட்டுக்குள் வருவானா? நல்ல நட்பு வாய்ப்பின் நலமாம்! இல்லையேல் சேற்றில் வீழ்த்திய குற்றம் பெற்றவரைத் தானே சேரும்! பின்னே வாழும் முறை, வளர்க்கும் முறையிலேயே உள்ளது என்பதைப் பெற்றோர் அறிந்து போற்றினால் தானே அறிவறிந்த மக்களும், பண்புடைய மக்களுமாக விளங்குவர்.

❀❀❀

9. பிள்ளையாகும் பெற்றோர்

பெற்றோர் என்னும் பெருமையினும் பிள்ளையைப் போல் பிள்ளையாகி விடும் உயர்பண்பைப் பெறுதலே பெற்றோர்களில் பெரும் பேறு பெற்றோர்.

குழந்தை படிக்கிறது; தாமும் உடன்படிக்கிறார் தாய்! அப்பிள்ளை எட்டாம் வகுப்புத் தேர்வுக்குச் செல்கிறது. தனிப் படிப்பாளராகத் தாயும் தேர்வுக்குச் செல்கிறார்.

பத்தாம் வகுப்புக்குப் பிள்ளை படிக்கும் படிப்பைத் தாயும் படிக்கிறார். தேர்வுக்கும் செல்கிறார்! இளங்கலை படிக்க வளர்கிறது பிள்ளை! அப்படியே தாயும் ஆகிறார்! இருவரும் தாய் சேய்! ஆனால் படிப்பில் கூட்டாளி. தேர்வில் கூட்டாளி! வட பைதிரத்தில் நிகழ்ந்த (உ.பி) நடைபேற்றுச் செய்தி!

சிறுவர்கள் பறக்க நினைக்கிறார்கள்! அவர்கள் முயற்சிக்குத் துணையாகிறார் பெற்ற தாய்! ஊரார் எள்ளல் ஏசல் பற்றிக் கவலைப்படாமல் பிள்ளைகளோடு பிள்ளையாய் உதவுகிறார்! பின்னே 'கிறுக்குப் பிடித்தவள்' என்று ஏசியவர்கள் இவளல்லவோ தாய் எனப் பாராட்டுமாறு பிள்ளைகள் பறக்கின்றனர். இரைட்டு உடன் பிறந்தார் வரலாறு இது.

பிள்ளையோடு பிள்ளையாகும் பெற்றோர் இளமைப் பேறு எய்துகின்றனர். பிள்ளைகளோ மூதறிவு பெற்றோராக விளங்குகின்றனர். எதனால்? கொள்ளலும் கொடுத்தலும் இயல்பாக நடைபெறுதலால்!

குழந்தையைக் கூட்டிக் கொண்டு நடந்தால், அப்பிள்ளை நடையினும் குறுநடை பெற்றோர் அல்லது கூட்டிக் கொண்டு போவோர் கொள்ள வேண்டும். வீசி நடந்தால் குழந்தை 'போ' என ஏசிவிட்டுத் திரும்பி விடும் அல்லது உடன் நடக்கவே உடன்படாது.

குழந்தையாவது எளிதன்று. வயது, பதவி, ஊர் பற்றிய கவலை எதுவும் எண்ணம் எதுவும் இல்லாக் குழந்தையாகி விட வேண்டும்.

வினாவுதல் குழந்தை இயற்கை! எதையும் வினாவும்! எந்தப் பெரிய அறிவாளியும் சொல்ல முடியாத அளவுக்கு வினாவும்!

மாடும் ஆடும் பச்சைப் புல்லையும் தழையையும் தின்னுகிறது. அது வெள்ளைப் பாலைத் தருகிறதே! எப்படி?

கண்ணுக்குத் தெரியாத காற்று மரத்தைக் கீழே சாய்ப்பது எப்படி? இந்த மரம் சாய்ந்ததே அது சாயவில்லையே ஏன்?

ஓடும் தொடர்வண்டியில் ஈயும் கொசுவும் ஆய்கிறதே! தொடர்வண்டி விரைவுக்கு அதுவும் பறக்குமா?

விடை சொல்ல வேண்டும்! அல்லது ஆம் நீ கேட்பது சரிதான். அறிந்து சொல்கிறேன் என்று சொல்ல வேண்டும். பிள்ளைகளிடம் தோற்கும் பெற்றோர் பிள்ளைகளை அறிவாளியாக்கும் பெற்றோர்!

வினாவுக்கு விடை சொல்ல முடியாத ஆசிரியர் மாணவனை முட்டாள் என்பது எப்படியோ, அப்படியே ஆவார் பெற்றோர் எனின் உண்மை முட்டாளும் மூடரும் எவர்?

குற்றம் உணர்வான், குணம் உணர்வான் என்பது பழமொழி.

❀❀❀

10. நலம் பாராட்டல்

குடும்பத்தில் எவரொருவரிடத்தும் நல்லவையும் இருக்கும். அல்லவையும் இருக்கும். முழுதுறு நல்லவரும் எவரும் இலர்; முழுதுறு கெட்டவரும் எவரும் இலர். பிறந்த குடும்பம், பழகிய சூழல், பெற்ற அறிவு, பழக்க வழக்க நிலைமை ஆகியவற்றால் குறை நிறைகள் இல்லாமல் போகா.

தன்முகம் தன்னால் கண்ணாடி வழியிலேயே அறியமுடியும். அவரவர் கண்ணையே அவரவர் கண்ணால் காண்பதற்கு இயலாது. தம் குறை அது போல் தமக்குத் தோன்றா. பிறர் குறை பளிச்சிட்டுத் தோன்றும்.

நமக்கும் குறையுண்டு; பிறர்க்கும் பிறர்க்கும் அது போல் குறை இருக்கவே செய்யும். அவரிடம் நிறைவானது எதுவும் இல்லாமல் போகாது. நிறையைப் பாராட்டும் நேய நெஞ்சம் வேண்டும். பல குறைகளின் ஊடு ஒன்றிரண்டு நிறைகள் இருப்பினும் அவற்றைப் பாராட்டல் உறவைப் பெருக்கும்; உரிமையைப் பெருக்கும்; உயர்வை ஆக்கும்; ஒன்றிப்பை அமைக்கும். எதிலும் குறைகாண்பார் தம் குறை அறியா முரண்டர் மட்டுமல்லர்; வாழ்வியல் அறியா மூடர்; பாராட்டுதலின் பயன் தெரியாப் பழிஞர். ஒன்றைப் பாராட்டினால் போதும்! ஒன்பது பாராட்டு குடிபுகும். பாராட்டு மெய்யாக - மேன்மையுணர்வுடையதாக இருக்க வேண்டும். போலிமை ஆக இருப்பதாகாது. நலம் பாராட்டல் போல் குறை நீக்கும் மருந்து எதுவும் இல்லை. அதே போல் திறந்த மனத்தோடு பாராட்டல் சிறந்த பயனைக் கட்டாயம் நல்கும். அதற்கு விரிந்த பெரிய மனம் வேண்டும். குடும்ப நலம் வாழ்வின் சிறப்பு உணர்ந்தவர்க்குத், தானே பாராட்டும் சீர்மை உண்டாகிவிடும்.

சமையல் ஆகட்டும்; சொல் ஆகட்டும்; செயல் ஆகட்டும்; குறை எனத் தோன்றினால் உடனுக்குடன் சினந்துரைத்தல் எதிரிட்டுப் பேசுதல் கூடாது. அப்படிச் செய்வது எரியும் நெருப்புக்கு மேல் எண்ணெய் விட்ட தாகிவிடும். நெருங்கி வருவாரையும் ஒதுங்கி ஒட்டாமல் போகச் செய்யும். பொறுமையாக இருக்க நினைவாரையும் பொறுக்க இயலாதவராய் - பகைவராய் ஆக்கிவிடும்.

குடும்பத்துக்குள் மானம் பார்த்தல் ஆகாது என்பது வள்ளுவம். அதற்காக மானம் கெட்டுப் போக வேண்டும் என்பதும் இல்லை. தொட்டாற் சுருங்கி எப்படிக் குவிகிறது! ஆமை எப்படி உறுப்புகளை உள்ளே இழுத்துக் கொள்கிறது. நத்தை எப்படி இயக்கத்தை நீக்கிக் கூட்டுள் ஒடுங்குகிறது. அது போல் அப்போதுக்கப்போது எதிரீடு இல்லாமல் ஏற்ற பொழுதில் எடுத்துரைத்து நலம் கொள்ளல் நாகரிகச் செயலாம். ஒருவர் பண்பாடும் பொறுப்பும் கொண்டால் மற்றொருவரும் கொள்வார். அதிலும் நல்ல குடும்பம் என்னும் பெருமை பெண்களின் வழியே உண்டாதல் வேண்டும். ஏனெனில் இருவரும் இணையர் எனினும் பிள்ளைகளின் - மூத்தோர்களின் பேணுதலில் பெரிதும் பொறுப்புக் கொள்பவர் பெண்களே. ஆதலால் குடும்பக் காப்பிலும் உயர்விலும் ஆண்களுக்கு உள்ள பொறுப்பினும் பெண்களுக்கே மிகுதியாக உண்டு என்று கொள்வது தாழ்மை இல்லை. குடிநலப் பேறு காப்பதாம்.

❀❀❀

11. கலந்துரையாடல்

கலந்துரையாடல் குடும்ப வாழ்வுக்கும் பொது வாழ்வுக்கும் இன்றியமையாதது. கலந்துரையாடல் கொண்டால் எச்சிக்கலும் எளிதில் தீர்ந்து போகும். மன இறுக்கம் போக்கும் மாமருந்து கலந்துரையாடல்.

வெப்பு நீர் - மிகு வெப்பு நீர் - தண்ணீர்விட்டு வளாவின் குடிபதம் குளிர்பதம் ஆகிவிடுவ தில்லையா?

பொங்கி வரும் பால் நீர்த்துளிபட்டதும் கொதியடங்கிப் போவது இல்லையா? கலந்துரையாடல் கலகம் நீக்கியாம்.

கலந்து உரையாடி - உறவாடி - உண்ணும் குடும்பம் குடிநலம் காக்கும் குடும்பம். கூட்டுக்குடும்பம் மட்டும் இல்லை. கணவன் மனைவியர் தனித்த குடும்பமும், மக்களொடு விளங்கும் குடும்பமும் கலந்துரையாடல், கலந்துறவாடல் இல்லாமல் பாம்பொடும், தேளொடும் வாழும் வாழ்வாகப் போகும்! இருவர் மூவர் வாழும் குடும்பம் எனினும் நேயமிலாக் கடுமையர் ஆகிவிடின், களப்போரில் வரிந்து கட்டி நிற்பதாகிவிடும். அந்நிலைக்கு விலங்கு வாழ்வு எவ்வளவோ மேம்பட்டதாம்.

ஆண் பெண் குரங்கு, குட்டிக் குரங்கு, ஆண்பெண் யானை, குட்டியானை, தங்களுக்குள் கொள்ளும் மகிழ்வைக் கண்ணேரில் சிற்றண்ணல் வாயிலிலும், தேக்கடியிலும் கண்டு பூரித்திருக்கிறேன்.

இந்தக் குரங்குக்கும் கீழ்மைப் பிறவியா மாந்தப் பிறவி!

இந்த மதயானைப் பிறவிக்கும் மதப்பிறவியா மாந்தப் பிறவி!

என ஏங்கியிருக்கிறேன். எழுதியும் இருக்கிறேன். ஆனால் ஒரே வீட்டில் இருந்து கொண்டு ஏறுக்கு மாறாக - முட்டலும் மோதலுமாக - ஒருவருக் கொருவர் குறை காணலும் கூறலும் கொண்டவராக - அந்நிலை முதிர்வில் வாய்ப் பேச்சும் இல்லா மூங்கையராக வாழ்வாரையும் காணுகிறேன். அந்நிலை அக்குரங்கு வாழ்வினும் மேம்பட்டதாகுமா? மதயானை வாழ்வினும் மாண்பினதாகுமா?

குரங்கில் இருந்து மாந்தன் தோன்றினான் என்று கூறினான் ஒருவன். மாந்தன் குரங்காகி - நாயாகி - நரியாகி - தேளாகி - பாம்பாகி இழிகிறான் என்று சொன்னாரும் உளர்!

ஏன் இந்நிலை?

தான் தோன்றித் தனம் - தடித்த போக்கு - பிறர் குற்றமே காணும் பேதைத் தன்மை - நான் என்னும் செருக்கு இன்னவற்றின் ஒட்டு மொத்த உருவாகவோ மாந்தப் பிறப்புப் பிறந்து கல்வியும் கேள்வியும் பகுத்தறிவும் பெற்று வாழும் பேய்த்தனம்.

தங்கள் நெஞ்சை நஞ்சாக்குகிறோம் என்றோ, தங்கள் இயல் செயல்களை எரிகொள்ளியாக்குகிறோம் என்றோ, என்றாவது தண்ணறும் சோலையாய் விளங்கவோ, பொங்குமா கடலாய்ப் பூரிக்கவோ நம்மால் கூடுமோ என்றோ துளியளவாவது எண்ணம் வாராதா? ஒரு மின்னல் கீற்று இப்படி உண்டானால்,

"மாசில் வீணை! மாலை மதியம்

வீசு தென்றல், மூசுவண்டறை பொய்கை" என இன்பநிலையம் ஆகிவிடுமே வாழ்வு! இம்மின்னற் கீற்று உண்டாக நெஞ்ச விரிவும் புரிவும் புகழ்மையும் அல்லவோ உண்டாக வேண்டும்.

❀❀❀

12. நயனார்ந்த நட்பு

நட்பு : நள்+பு =நட்பு. நள் = செறிவு. சான்று : நண்பகல் நள்ளிரவு.

மயிரும் ஊடுபுகல் இல்லாச்செறிவு! தாம் அவராக, அவர் தாமாக வாழ்வதாம் கூடுவிட்டுக் கூடுபாயும் குளிர்மை வாழ்வே நட்பு வாழ்வாம். காதல் சிறந்ததே! அதனினும் கூடச் சிலவகைகளால் சீரிதாக விளங்கும் செவ்வியது நட்பு!

"நோவின் நோதல் சாவின் சாதல்"

என்பது இலக்கண இலக்கிய ஆட்சிமட்டுமன்று, இலங்கிய வாழ்வாகவும் திகழல் காட்டும் வாழ்வியல் சான்றுகள் சாவா நட்பாக - நட்பு வாழ்வாக - வரலாற்றில் வாகை சூடிக் கொண்டுள்ளன!

கள்ளே சூதே எனக் கொண்ட நட்பன்று!

கண்ணே உயிரே எனக் கொண்ட நட்பு அது!

எரி நெருப்பில் போகும் இரும்புடன் பற்றுக்குறடும் பற்றிப் போகும் பான்மையை உடையவர் அவர்.

ஒட்டிப் பிறந்த இரட்டைப் பிறவியர்க்குள்ளும்

ஒட்டா நிலை உண்டு என்பது உலக வரலாறு.

ஒட்டோ உறவோ இல்லாமல் ஈரொருவராய் இயன்றாரும் இல்லாமல் இல்லையே!

நல்ல நட்பு - இடித்துரைக்கும்! 'இடிக்கும் கேளிர்' என்பது தொல்லோர் சூட்டிய பட்டம் அது.

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தல் பொருட்டு"

என்பது நயனார்ந்த நட்பின் விளக்கம்.

இடித்துக் கூறலை அன்றி அடித்துக் கூறியும் கடனாற்றத் துணிவது அந்நட்பு. ஆனால், அவ்வடிப்பு தன்னைத் தானே அடித்துக் கொண்டதாக வாட்டி வருத்தும்!

நயனார்ந்த நட்பு, தான் பழியுண்டாலும், இழியுண்டாலும் தன் நட்புக்குப் பழியோ இழிவோ உறக் கூடாது என்னும் துடிப்போடே இலங்குவது!

தனித்த இருவர் நட்பே எனினும், அது குடும்ப அளவில் வளர்ந்து

விலங்கிரட்டை, பறவை இரட்டை போலன்றி

இலை இரட்டை, பூவிரட்டை போல் சிறக்கும்!

வீடுகள் வேறானாலும் கூடுகள் ஒன்றாகும் உயர்வினது அது.

நன்னட்பு தங்களுக்குள் முகமனுரை எதிர்பாராது.

பிறருரைக்கும் பொருந்தாக் குறையைப் பொருட்டாக எண்ணாது.

உடனே புறந்தள்ளவும் செய்யும்! தம்மைப் பழித்தாராகத் தவிர்த்து ஒதுக்கித் தள்ளவும் செய்யும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவை ஒன்றாது. மனையில் உறவாடி மன்றத்துப் பழிப்பாரை மதியாது.

கெட்ட காலை விட்டுச் செல்வது கட்டாயம் கயமையது.

"துன்பத்திற்கு யாரே துணையாவார்?" என்னும் ஏக்கப் பழவினா பழைமை நட்பின் பக்கம் சாரவே சாராது!

ஒருவர் இயற்கைப் பிரிவு உற்றாலும் அக்குடியும் தாங்கிக், கொண்ட நட்பை மெய்ப்பிக்கும் நயனார்ந்த - நலனார்ந்த - நட்பு!

❀❀❀

13. விருந்து

"விருந்தே புதுமை" என்பது தொல்காப்பியம். உறவினர் விருந்தர் அல்லர். சுற்றத்தார் நண்பர் அன்பர் விருந்தர் அல்லர்! புதிதாக வருவாரே விருந்தர்!

அவ்விருந்தர் சொந்தங் கொண்டாடி வந்தார் அல்லர்! சோற்றுக்கு வந்தாரும் அல்லர்! என்ன கிடைக்கும் என எண்ணி வந்தாரும் அல்லர்!

வீட்டார் தேடிப் போய் அழைத்து வந்தார் அவர். தொண்டால் தூய்மையால் வாய்மை வாழ்வால் வாராரா வீட்டுக்கு - நம் வீட்டில் கால் வையாரா - என எதிர் நோக்கியிருக்கும் மாசிலா மணியர் அவர்.

அவர் வருகையால் குடும்பம் பெருமை எய்தும். பேறும் எய்தும்! அவர் வீட்டுக்கு அப்பெருமானார் வந்தார் என அறிந்தார் போற்ற அமைந்த விருந்தர் அவர்.

'விருந்து கண்டு ஒளித்த ஊடல்' என்பது தொல்காப்பியம்.

வீட்டாரிடம் சற்றே சிறிய, இணக்கமில்லாப் பிணக்கு இருந்தாலும் வந்த விருந்தால் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போக வீடே ஒன்றாகி உவப்புறும். அவரும் குடும்ப நலனுக்கு உரியவற்றை உள்ளார்ந்த உணர்வால் உரைத்து உவப்பில் தளிர்ப்பார்!

கரவிலா அவர் வருகையும் கலந்துரையாடலும் காலமெல்லாம் வழி நடத்தும். மீண்டும் அவர் வருவாரா என எதிர் நோக்கச் செய்யும். வீடும் புதுப் பொலிவும் வலிவும் கொள்ளும். வாழ்வியல் தெளிவும் வளமாக வாய்க்கும். எங்கும் கிட்டா இன்ப நிலை இயல்பாக வாய்த்து ஒவ்வொருவரையும் புதுப்பிறவியராய் நடையிடச் செய்யும்.

தொண்டால் - துறவால் - நூற்படைப்பால் - பொழிவுச் சிறப்பால் - பண்பாட்டு நயத்தால் பல்கால் கேட்டும் அறிந்தும் கொள்ளப்பட்டவராய், தற்செயலாக வந்தவராக இருப்பார் அவ்விருந்தாளர்!

பொங்க - பொரிக்க - வகைவகை ஆக்கிப் படைக்க - எள்ளளவும் எண்ணாராய் இருப்பார். குடும்பத்தில் ஆக்கி இருப்பதைக்

குடும்பத்தினரோடு ஒருவராய் இருந்து உண்பார்! உரையாடுவார்! பொருட் செலவுக்கோ வேலைக் கேட்டுக்கோ இடமாக்கார்!

எளிமையர் அவர்! இனிமையர் அவர்! அடுத்த வேளைக்கும் அங்கே தங்குவார் அல்லர்! ஒரு வேளை உண்டதை என்றும் மறப்பாரும் அல்லர்.

குழந்தை போலும் அவர் குழந்தையோடு குழந்தை ஆவார்!

முதுவரோடும் முதுவராய் உரையாடி உவப்புறுத்துவார்!

குடிதாங்கியரொடு கூடிப் பேசிக் குளிர்வார்! சற்றே பொழுது இருப்பினும் - நீரே அருந்திச் செல்லினும் - நினைவை விட்டு அகலாப் பதிவராகக் காலமெல்லாம் விளங்குவார்!

'விருந்தோம்பலால் கெட்டது வீடு' என்றாக்க வருவார் விருந்தாளர் அல்லர்! நாகரிகக் களவர் - கரவர் - அவர். அத்தகையரால் - அவர்தம் நிறையா மனத்தை நிறைவிக்கக் கடன் பட்டார் வாழ்வியல் புரிந்தார் அல்லர்! பகட்டும் பளிச்சும் பசப்பும் கருதிப் பாழ்பட்டுக் கெட்டுப் போன குடும்பத்தவர். தம் பொருள் நிலை - தேவைநிலை. கருதாமல் அவர் புகழுரைக்காகப் பன்னாள் வைத்து விருந்தோம்பிய பின்னரும் பழி பேசவே ஆளாகுபவர், குடும்பக் கேடு செய்பவர் என்பதில் ஐயமில்லை!

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல,
இல்லாகித் தோன்றாக் கெடும்"

என்னும் வள்ளுவத்திற்கு எடுத்துக் காட்டாம் குடும்பம் அது.

❀❀❀

14. விழா

விழைவால் - விருப்பத்தால் - எடுப்பது விழா. விழவு எனவும் வரும்.

புறா என்பது புறவு என்பதன் வழியே வருவது. அதுபோல் விழைவு என்பதன் வழியாக வருவது விழா.

விழா, இன்பச் சுரப்பு. இளையர் முதியர்; ஆடவர் பெண்டிர்; ஊரார் அயல் ஊரார்; கொண்டார் கொடுத்தார்; உள்ளார் இல்லார் என எவ்வேறுபாடும் இல்லாமல் எல்லாரும் இன்புறச் செய்வதே விழாவாம்.

பழநாள் தொட்டே பொங்கல் விழா, கார்த்திகை ஒளிவிழா, குலதெய்வ வழிபாட்டு விழா எனப் பல்வேறு பொது விழாக்கள் நிகழ்ந்தன. பின்னர் விளக்கணி விழா வரவாயது.

விழாக்களில் மன்னர் குடும்ப விழா, மக்கள் குடும்ப விழா, பொது விழா, வீர வழிபாட்டு விழா, கற்புடைப் பெண்டிர் தீப்பாய் விழா என்பனவும் நிகழ்ந்தன.

பொது விழாக்காலம் ஆடல் பாடல் இசை நாடகம் எனக் கலை நயம் கமழும் விழாவாக அமையும். ஊரவர் அனைவரும் பங்களிப்புச் செய்யும் வகையால் தலைக்கட்டு வரி வாங்கி நடத்தப்படும். பரம்பரைத் தலைமை போற்றப்படும். சப்பரம் தேரோட்டம் என்பன பெருவிழாக்களில் காணத்தக்கன.

விழா மாதம் தொழிற்கு இடையூறு இல்லாமல் இருக்கும். மணவிழா இல்லா மாதமாகவும் பெரிதும் இருக்கும். விழாவின் போது பலரும் கலந்து உறவாடலால் உண்டாகிய நெருக்கம் மணமக்கள் தெரிந்தெடுப்புக்கு வாய்ப்பாக அமையும். அதனால் பெருவிழா - பொது விழா முடிந்த அடுத்த மாதம் பெரிதும் மண விழாவாம் குடும்பவிழா நிகழ்வதாக அமையும்.

மணவிழா, பூப்புநீராட்டு விழா முதலியவை சிற்றூர்களில் பரம்பரை பரம்பரையாக ஊர் நாட்டாண்மை, தலைவர் என்பவர்கள் முன்னிலையில் மகளிரே நடத்தினர். ஒரு வீட்டு மண விழா, பூப்பு விழா எனினும் ஊரே கூடிச் செய்வது வழக்கம். ஊர் ஒப்புரவுக்கு வழி செய்வதாக விழாக்கள் இருந்தன.

விழாக்களுக்குப் புத்துடை கட்டினர்; பலவகைப் பண்டங்கள் செய்தனர்; ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர். பொங்கல்விழா மூன்று நாள்கள் நிகழும். மனைப் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என்பவை அவை.

விழாக்கள் - விருந்துகள் - எனக் கடன் உடன் பட்டுச் செய்த குடும்பங்கள் உள்ளது உரியது என்பவற்றை இழந்து வறுமையுற்றதும் உண்டு. நகரங்களில் மேட்டுக்குடிகளில் நடைபெற்ற மாப்பிள்ளைக் கொடையாம் வரதட்சணை சிற்றூர்களையும் பற்றிக் கொண்டமையால் வறுமையர் மேலும் வறுமையர் ஆயினர். அந்த வீட்டைப் போல், இந்த வீட்டைப் போல் எனப் போலிப் பெருமை கருதி வாங்காத வகையெல்லாம் வட்டி, கூட்டு வட்டிக் கடன் பட்டுக் கெட்டொழிந்த குடும்பங்கள் உண்டு.

விருப்பும் இன்பும் ஆகிய விழா வெறுப்பும் துன்பும் ஆகிவிட்ட நிலையுற்றன. வரவறிந்து செலவு செய்ய முடியாமல் வெளிப்பகட்டுக்கு ஆட்பட்டு விழாக் கொண்டவர் குடும்பத்தோடு சாவாரும் ஆயினர். வருவாய் குறைவாக இருந்தாலும் செலவு அதற்குள் இருப்பின் சிறுமை வாராது. விரலுக்குத் தக்க வீக்கம் என்னும் பழமொழி எண்ணத் தக்கது.

❀❀❀

15. வீட்டுத் தோட்டம்

வீடு தோறும் அறிவை வளர்க்கச் சிறிய அளவிலேனும் நூலகம் வேண்டும். அவ்வாறே, உடல் நலம் காக்கவும் வளர்க்கவும் வீட்டுத் தோட்டம் கட்டாயம் வேண்டும்.

வீடும் வெளியும் உள்ளவர்கள், வெளியைப் பார்வைச் செடிகளால் நிரப்ப வேண்டா! பயன் செடிகளால் - கொடிகளால் - கீரை வகைகளால். நலப்படுத்த வேண்டும்.

வேலையும் வியர்வையும் உடல்நலம்; உழைக்கும் பொழுது உடல் நலப் பொழுது மட்டுமன்று; உவகைப் பொழுதுமாம்!

விதைத்து வெளிவரும் முளையைப் பாருங்கள்! நீர் விட உண்டாகும் தளிர்ப்பைப் பாருங்கள்! பூவும் பிஞ்சும் காயுமாய், தளிரும் இலையும் பயனுமாய் விளங்கும் தோட்டம் தரும் காட்சிப் பொலிவைப் பாருங்கள்!

மலையும் காடும் வயலும் உங்கள் வீட்டுக்கு வந்து விருந்து படைக்கும் கொடையாளியாகக் கண்டு மகிழ்வீர்கள்!

முதியவர்கள் இச்செயலைச் செய்தால், உழைத்து அலுத்து வருபவரும் உடனாவர்; குழந்தையரும் உடனிருந்து உதவுவர். தாத்தா பாட்டி ஒரு வாளி தண்ணீர் கொண்டு வந்தால் போதும்! பேரப் பிள்ளைகள் விளையாட்டு இன்பம் போல் தாமே தாத்தா பாட்டியைப் பார்வையாளராக்கி விட்டுப் பயன் தொழிலராகப் பளிச்சிட்டு விடுவர்!

இலை தழைகள், பயன்படுத்திய காய்கனி எச்சங்கள், உரச் செடிகள் ஆயவற்றைத் தெருவிலோ குழியிலோ எறியாமல், உரக்குழி தோண்டிப் போடுங்கள்! ஆட்டுப்பிழுக்கை, மாட்டுச் சாணம் வாய்த்தால் கொட்டுங்கள்! மண் போட்டு மூடுங்கள்; மழை நீர், நிலத்தடி நீர் நனைக்க மட்கிப் போய் நல்ல உரம் ஆகிவிடும்; மண்புழுவும் அங்கேயே உருவாகிவிடும்! பசுந்தாள் உரம் உங்கள் கையில் இருக்கும்! கடைக்கு ஓடி மண்ணை மலடாக்கும் வேதிம உப்பு உரங்களைத் தேட வேண்டா!

அம்மண்ணில் நம்முன்னோர் பயிரிட்ட, பொருந்திய காய்கறி வித்துகளின் விளைவில் பொறுக்கி எடுத்த விதைகளைத் தேர்ந்து எடுத்துப் பயன்படுத்தினால் வித்தும் உங்களதாம்! விளைவும் உங்களதாம்! இயற்கையொடு பொருந்திய நலவகை உணவுமாம்!

குளிப்போமே, கலங்கள் கழுவுவோமே - அந்த நீர் செடி கொடிப் பாத்திக்குச் சென்றால் இரட்டைப் பயன் அல்லவா!

வீட்டிடம் போக வேறிடம் இல்லையே என்கிறீர்களா? மாடியிருந்தால் மாடித் தோட்டம் ஆக்கலாம்! மண் தொட்டிகளைக் கொண்டு! கூரைக் குடிசை என்றால் கொடிப்பந்தல் ஆகிவிடும் அது.

சொந்த வீடு இல்லை! வாடகை வீடா? வாடகை வீடானால் என்ன? நீங்கள் வாழும் வீடு தானே! இருக்கும் வரை இருக்கும் இடத்தில் இந்த நலங்களை அடையலாமே! மனையுடையார்க்கு, நிரம்பப்பயன் உள்ள போதில் ஓரிரு முறை நீங்கள் கொடுத்தால், அவர்க்கு உங்களை வெளியேற்ற மனமும் வராதே! ஒன்றால், எத்தனை நலங்கள்!

“உழைப்பாலே தான் உலகம் வாழ்கிறது; கையேந்தி வாழ்வதால் அன்று” என்பதால் தான். உலக நலச் சான்றோர் திருவள்ளுவர்,

“கை செய்து ஊண் மாலையவர்” என்று மாலை சூட்டினார்.

மாலையவர் மாலை தொடுப்பது போல் தொடுத்துவரும் பரம்பரையர். வீட்டு விளைவின்பம் வீடு பேற்றின்பம்! கடைக்காய், கடைக்காயே!

❀❀❀

16. வரவு செலவு

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்" இல்வாழ்வான் என்பார் திருவள்ளுவர். அந்தச் செலவு வரவு பார்த்தலிலும் வேண்டத் தக்கது ஒன்று. வரவு செலவு, கணக்கு எழுதிப் பார்த்தல். இது இல்வாழ்வுடையவனுக்கு மட்டுமன்றி வாழும் அனைவருக்கும் பொதுவான கடப்பாடாகும்.

"எழுதிப் பாராதவன் வாழ்வு ஒழுகிப் போன நீர் போன்றது" என்பர். வரவு செலவு பார்த்தலை "ஆகாறு போகாறு" என உழவன் தொழில் ஆகிய வேளாண்மை கொண்டு விளக்குவார் திருவள்ளுவர்.

ஆற்றில் இருந்து அல்லது அணைக்கட்டில் பிரிந்து நீர் வரும் பெருவழி கால்வாய். அக்கால்வாய் நீர் வந்தடையும் நீர் நிலை கண்வாய்! (கம்மா என்பது மக்கள் வழக்கு). அக் கண்வாய்க்கு மூன்று நாள்கள் அல்லது நான்கு நாள்கள் நீர்வரும். அதனைத் தேக்கி வைத்து மூன்று திங்கள், நான்கு திங்கள் வாய்க்கால் வழியே பாயச் செய்து ஒரு விளைவை எடுத்து விடுவர். இது நடைமுறை நிலை!

இவ்வாறே கால்வாய் போல வருவாய் வந்தாலும் பிடிமானமாக வைத்து வாய்க்கால் போலச் செலவிட்டுப் பயன் கொள்ள வேண்டும் என்பதை,

"ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

என்கிறார். (ஆகாறு - பொருள் வரும் வழி. இட்டிது - சிறிது. போகாறு - செலவாகும் வகை)

"ஆனமுதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் போகும்" என்பது வரவு செலவு பற்றிய வெளிப்படைப் பாட்டு.

தேவைச் செலவு, தேவை இல்லாச் செலவு என்பவற்றைப் பார்த்துச் செலவிடுவார் எவரும் கையிருப்பு, வைப்பிருப்பு இல்லை என்னும் இக்கட்டாம் நிலைக்கு ஆட்படார்.

கடன் உடன் என்றும், ஒத்தி (ஒற்றி), விலை, வட்டி வாசி என்று அலைக்கழிவுக்கு ஆட்படார்.

நம் வருவாய்க்கு உள்ளாக நாம் வாழும் வாழ்வு கடமை அறிந்த வாழ்வு. கடன்பட்டால் கவலை வாழ்வு தான். கவலை கறியைத் தின்னும் என்பது பழமொழி.

பக்கத்து வீட்டுப் பணக்காரரைப் பார்த்து, குறுக்கு வழிக் கொள்ளையரை நோக்கி நம் குடும்பச் செலவு செய்தால் குனிந்து போவது அன்றி நிமிர்ந்து நிற்க ஒரு நாளும் முடியாது என்பதை வீட்டுத் தலைவன் முதல் அனைவரும் உணர்ந்து வாழ்ந்தால் எவரையும் எதிர்பார்க்கவோ கையேந்தி வாழவோ நேராது.

'கடன் இல்லாக் கஞ்சி கால் வயிற்றுக் கஞ்சி' என்பது போல் கவலைப்படா வாழ்வு வாழத் தூண்டலாகத் துணையாக இருப்பது, வரவு செலவு எழுதும் வழக்கமும் எண்ணிப் பார்த்துச் செலவு செய்யும் வழக்கமும் ஆகும்.

❀❀❀

17. முதியோரை மதித்தல்

ஒரு வீட்டில் பெற்றோர் அவர் பெற்றோர் முதலிய முதியவர்கள் இருப்பது இல்லத்திலேயே தெய்வங்கள் இருப்பது ஆகும். அவர்களைப் பேணிக் காக்கும் பேறு எளிதில் கிடைக்காது. அது கோயில் வழிபாடு செய்வதனினும் கூடிய நலமும் இன்பமும் செய்வதாம்!

பெரியவர்கள் இருக்கும் வீட்டில் பண்பாடு, குடும்பச் செட்டு, அமைதி ஆகியவை இயல்பாக நிலவும். ஆனால் போலி நாகரிக வாழ்வு பெரியோர்களைப் புறக்கணிக்கவும் ஏதிலியர் இல்லத்தை நாடவும், பிச்சைக் கலன் ஏந்தவும் ஆக்கி நாட்டு நலக் கேடாகப் பெருகி வருவது கண் கூடு.

"தந்தை தாய்ப் பேண்" என்பதும்,

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதும் நாட்டு நடைமுறை இல்லாமல் ஏட்டளவில் நின்றது. பள்ளிக் கல்வியாக இடம் பெற்றிருந்த இம் மணிமொழிகள், பள்ளிக்குள் கால் வைக்கவும் முடியாக் கல்விச் சூழலை ஆளும் அரசே செய்யும் கொடுமையும் ஆகிவிட்டது.

முதியோரைப் பேணாதவர்களைப் பின்னே வருபவர் பேணுவரா? அவர்கள் பின்னவர் அவர்களைப் பேணுவார்களா?

கால் ஊன்றப் பழகினால் கடந்து போகும் விலங்கு போலவும், சிறகு முளைத்துப் பறக்கத் திறம் வந்தால் பறந்து போய்விடும் பறவை போலவும் மக்கள் நிலை இருந்தால் பகுத்தறிவு பெற்ற பயன்தான் என்ன?

குழந்தையைக் காக்கும் பெற்றோர் போல நாட்டை ஆள்வோன் காக்க வேண்டும் என்று வேந்தன் ஒருவன் சங்க நாளிலேயே பாடி வைத்தான். அவன் தொண்டைமான் இளந்திரையன் என்பான்.

இன்னொரு வேந்தன் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் என்பான். பாரதப் போர் வீரர்களுக்கு இக்கூட்டம் அக்கூட்டம் என்று பாராது அனைவருக்கும் சோறு வழங்கியவன்.

ஒருவர் பெற வேண்டும் செல்வங்களுள் எல்லாம் தலை சிறந்த செல்வம் முதியரை வீட்டில் பெற்றிருக்கும் செல்வமேயாம். முதியர் வீண் செலவுக்கும் தொல்லைக்கும் உரியவர் என எண்ணுவது குடியிருக்கும் வீட்டைத் தானே தீக்கொளுத்தி எரிப்பது போன்றதாம். நம்மைத் தந்து பேணிக் காத்துப் பெருமைகள் எல்லாமும் சேர்த்துப் பெற்றுப் பெருகி வாழச் செய்தவரே பாரம் என்று கருதும் பிள்ளைகள் அப்பெற்றவர் பெற்ற பிள்ளைகள் தாமா? நன்றி கெட்ட பிறவியர் அல்லரோ அவர்?

❀❀❀

18. முதியோர் கடமை

முதியவர்கள் வயதால் மூத்தவர் மட்டும் தாமா? பண்பாலும், அறிவாலும், அடக்க ஒடுக்கங்களாலும் மூத்து முதிர்ந்தவர்களாக இருக்க வேண்டும் அல்லவா!

முதியவர் அனைவரும் இத்தகைய முதியவர் தாமா எனின் வாழ்வியல் வகுத்துத் தந்த வள்ளுவர்க்கே ஐயப்பாடு வந்ததால் தான்,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்" துணை என்று கூறாமல், "நல்லாற்றில் நின்ற துணை" என்றார்.

முதியவர் நன்னெறியராக விளங்கினால் நீ நிலை பெற்ற துணையாக இருத்தலைக் கடமையாகக் கொள் என மணங்கொள்ளப் போகும் மணவாளனுக்கு மணமேடை வாழ்த்தாகவே வாழ்த்தும் போதே கூறுகிறார். இல்வாழ்க்கை முதல் பாட்டு இது. இறுதிப் பாட்டும் தெளிவாக இதனை வலியுறுத்துவதேயாம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்"

என்கிறார். பிள்ளைகள் பெற்றோரைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என்றால் அப்பெற்றோர் வாழ வேண்டிய முறைப்படி வாழும் தெய்வ நிலையராகத் திகழ வேண்டும் அல்லவோ!

பிள்ளைகள் தம் பெற்றோரைப் பாரமாகவோ தொல்லை தருபவராகவோ எண்ண வேண்டுமானால், அத்தகையராகவும் பெற்றோர் உள்ளனர் என்பது உண்மைதான்!

வெள்ளரிப்பழம் பழுத்தால் வெடித்துவிடும்! அப்படி வெடிப்பதா அறிவறிந்த பண்புடைய முதுமைப் பிறவி?

மாங்கனி கனியக் கனியச் சுருக்கம் கொள்வது இல்லையா? புளியம் பழம் பிஞ்சாக இருந்து ஊதைக் காயாகத் தடித்து, பழுத்த நிலையில் தோலும் சதையும் விதையும் ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் பற்றற்ற தூய துறவரை ஒப்ப விளங்க வில்லையா? அப்படி மாங்கனியாக - புளியம் பழமாக - முதியர் விளங்க வேண்டும் அல்லவா! அலைக்கழிக்கும் அவலத்தராக இருந்தால் ஒரு வேளை - இரு வேளைகளா? ஒரு நாள் இரு நாள்களா? பொறுமையாகத் தாங்கிக் கொண்டிருக்க! வெறுப்பை ஏற்றும் ஒதுக்கிப் புறக்கணிக்கச் செய்யும் செயன்மையர் அம்முதியர் தாமே!

கடமையும் குடிமையும் போற்றும் முதியர், குடும்பத்தினர்க்குப் புரிந்தும் பரிந்தும் உதவும் உதவிவாழ்வராக - ஆசைகள் அற்ற அருமையராக - தம்மால் இயலும் சிறு சிறு உதவிகளை மாறாமல் மறவாமல் விரும்பி விரும்பிச் செய்பவராக இருந்தால் மக்களுக்கும் மக்களின் மக்களுக்கும் கொண்டவர் கொடுத்தவர்க்கும் மாற்றெண்ணம் துளி அளவு கூடப் புகுதல் ஆகுமா?

வாழ்வோர் பண்பிலும், வாழ்ந்து வழிகாட்டுவோர் பண்பு சிறந்து அல்லவோ விளங்க வேண்டும். அதனால் தானே தொல்பழ ஆசான் தொல்காப்பியன், "மக்களொடும் சுற்றத்தொடும் கலங்கரை விளக்கம் போல் ஒளிவழிகாட்டல் மூத்தோர் கடமை" என்று கற்பியலின் நிறைவில் ஆணை மொழியாக மொழிந்தான்! அதனைக் கற்காவிடினும் வாழ்ந்து காட்டல் முதியோர் கடமை அல்லவா!

❀❀❀

19. வாழ்வியல் பதிவு

வரவு செலவு எழுதுவது போல் வாழ்வியல் பதிவும் எழுத வேண்டியது இன்றியமையாதது ஆகும். தமிழகத்து வாழ்ந்த பெரும்புலமையாளர் வாழ்ந்த ஊர், காலம், பெற்றோர் முதலாய வரலாற்றை அறிய முடியவில்லை. ஆட்சி புரிந்தவர் வரலாறும் அரும்பாடுபட்டே தீர்மானம் செய்யவும், தீர்மானம் செய்ய முடியாமலும் போகின்றன. ஆதலால் வாழ்வியல் பதிவு இன்றியமையாததாம்.

அப்பதிவு இல்லாவிடின் என்ன என்பார் உளர்? அப்பதிவு இல்லாமையால் பிந்தியோர் முந்தியோராகவும் முந்தியோர் பிந்தியோராகவும் ஆகின்றனர். புனைந்தும் இட்டுக் கட்டியும் சொல்வதற்கு இடமாகிவிடுகின்றனர் என்பதாம். இதை எழுதும் யான் என் தந்தையாரை அறிவேன். அவர் பிறந்த நாளை அறியேன். அப்படியே என் அன்னையார் பிறந்த நாளையும் அறியேன். என் தந்தையின் தந்தை, அவர் தந்தை பெயர்களை அறிவேன். அவர்கள் பிறந்த நாள் இயற்கை எய்திய நாள் வரலாறு பற்றி எதுவும் அறியேன். அவர்களுக்கு முன்னவர்கள் பெயர் தானும் அறியேன்.

ஆனால் ஆங்கிலப் புலமையர், ஆட்சியர், அறிவர் வரலாறுகள் காலக் கணிப்புடன் முந்தையர் குறிப்புகளும் வரலாறும் அறியுமாறு பதிவு செய்து வைத்துள்ளனர். தமிழ்ப்புலவர், தமிழக ஆட்சியர் வரலாற்றை எவரும் அப்படித் துல்லியமாக வரைய இயலாமை பெருங்குறையாகவே உள்ளது. ஆண்டுத் தொடர்ச்சி கொள்ளாமையும் பல்சக்கர ஆண்டு கொண்டமையும் இன்றும் பெருங்குறையாகவே அமைகின்றது.

நம் வாழ்வியல் பதிவு வருவார்க்கு அறிமுகப்படுத்தல் மட்டுமன்று. வாழ்வியல் வழிகாட்டியாம் செய்திகளும், ஆழ்ந்து கண்ட உண்மைகளும் அறிய வராமல் போயொழிகின்றன.

கற்றவர்கள் கண்டு பிடிப்பாளர் நிலையே இத்தகைத்தெனின் கல்லார் வரலாறு அவர் பரம்பரை அறிய முடியுமா? அவர்கள் பட்டறிவுப் பயன்,

படைப்புத் திறம் ஒட்டு மொத்தமாக அறிய வராப் பொருளாகிப் போய்விட்டன அல்லவா!

இவற்றை எண்ணினால் எண்ணத் தொடங்கிய நாள் முதலாகவாவது எழுதத் தொடங்கி விட வேண்டும் அல்லவா!

ஆனந்த ரங்கர் நாட்குறிப்பு எழுதினார். அவர் நடை முறையை மட்டுமா அறிகிறோம். நாட்டுநிலை மொழிநிலை பழக்க வழக்கம் முதலாய பலவும் அறிய வாய்க்கின்றனவே. அது கொச்சை வழுவமைந்தது எனினும் செவ்விய வடிவும் செழுமைப் பொருளும் நாம் எண்ணிக் கண்டு கொள்ள வைக்கின்றதே. அதனால் அவரவரால் முடிந்த நடையில் குறிப்பு விளக்கம் காலநிலை முதலியவற்றைத் தவறாமல் பதிவு ஆக்குதலைக் கடமையாகக் கொள்ள வேண்டும். அதனால், அவர் குடியினரும் பிறரும் அவர் எண்ணாத, அறிவு, பண்பு, வரலாற்றுப் பயன்களை அடைய முடியும் என்பது தெளிவாம். எளிய பொருள் என நினைப்பவை பல பின்னவர்க்கு அரிதில் அரிய பொருளாகச் சிறக்கும் என்பது ஆய்வாளர்கள் உணர் பொருளாம்.

❀❀❀

20. ஊர் அவை அமைப்பு

ஊரே தன் ஆட்சியை அமைத்துக் கொள்வது ஊர் அவை அமைப்பு ஆகும். அங்குக் கட்சிக் கொடி தலை நீட்டக் கூடாது. சாதி சமயப் பிரிவு தலைகாட்டக் கூடாது. ஊரில் குறைந்தது ஐந்தாண்டுகளாவது வாழ்ந்தவராய், ஆண்டுக்கு இருநூறு நாள்களுக்குக் குறையாமல் தங்கியிருப்பவராய் உள்ளவர் அவைக்கு உரியவர் ஆதல் வேண்டும். சோழர்காலக் குடவோலை போல ஊராட்சித் தேர்தல் நடைபெற வேண்டும். ஊரவைக்கு வாங்கும் வரியில் ஆறில் ஒருபங்கு அரசுக்கு ஆண்டுக்கு ஒரு முறை வழங்க வேண்டும். ஐந்து பங்கு வரிப்பணம் கொண்டு ஊர் அவை ஊர்க்கு வேண்டும் ஆக்கப் பணிகளைத் தன்னுரிமையோடு செய்தல் வேண்டும்.

ஊரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தகுதி இழப்பு உடையவரானால் நீக்கல் உரிமை ஊர்ப் பொதுப் பேரவைக்கு உரிமைப் பட்டதாக இருக்க வேண்டும். ஊரின் எந்த நடவடிக்கைகளும் ஊரவைக்குத் தெரிந்திருக்க வேண்டும். அரசு தலையீடு எதுவாயினும் ஊரவை வழியாக மட்டுமே நிகழ வேண்டும்.

மருத்துவம், கல்வி, அஞ்சல், போக்குவரவு அரசுப்பணியாகவும், ஏரி, கால், வீட்டமைப்பு, உள்ளூர்ப் பண்டமாற்று, கடையுரிமை, பொழுது போக்கு, வழிபாடு முதலியவை ஊரவை வழியாகவும் நிகழ்வதாக இருக்க வேண்டும்.

ஊரவை சாதி அமைப்பன்று; சமய அமைப்பன்று; கட்சி அமைப்பன்று; அரசியல் அமைப்பன்று; அற அமைப்பு! அவர்கள் குறைகள் அவர்கள் தீர்ப்பில் இருக்க வேண்டும். அவர்கள் தேவைகள் அவர்களால் நிறை வேற்றப்படுவதாய் இருக்க வேண்டும்.

ஒவ்வோர் ஊர் அவையும் பக்கத்து ஊர்கள் பலவற்றொடோ சிலவற்றொடோ ஒன்றிய அமைப்பாக இணைய வேண்டும். ஒன்றியம் ஒவ்வோர் ஊரவை உறுப்பாலும் அமைந்ததாய் இருத்தல் வேண்டும். அடுத்த ஊர்களின் இணைப்பு ஆகிய ஒன்றிய அமைப்பு அவ்வட்டாரக் கண்காணிப்பு வணிகவளாகம் தொழிற்சாலை வளர்நிலைக் கல்வி

வேலைவாய்ப்பு முதலியவற்றைத் தன் ஆளுமைக்கு உரியவையாகக் கொண்டிருக்க வேண்டும். புறம் போக்கு நிலம், பொருள் வைப்பகம், மழைநீர்ச் சேமிப்பு, குடிநீர்த் தேவை, வட்டாரப் பாதுகாப்பு என்பவற்றைக் கொண்டதாக விளங்க வேண்டும். உள்ளூர், பக்கத்தூர், வேற்றூர் என்று பாராமல் எவ்வூரிலும் கரவானவர், களவாளர், வன்முறைக் கொடுமையர், குடிவகை விற்பவர், கள்ளமதுக் காய்ச்சுபவர், கையூட்டுப் பெறுபவர் இல்லாமல் கண்காணித்துத் தாமே அவை நெருங்க முடியாமல் செய்யத்தக்க சால்பமைப்பாகத் திகழ வேண்டும். ஒன்றியம் ஏறத்தாழ மக்களுக்காக அமைந்த தன்னாட்சிச் சிற்றரசாகத் திகழ வேண்டும்.

❀❀❀

21. அலுவலர் கடன்

அலுவலர் என்பார் அலுப்பு இல்லாத வேலை செய்பவர் என எண்ணப்படுகிறார். அலுப்பில்லா வேலை செய்யலாம்! பொறுப்பில்லா வேலையராய் இருத்தல் அத் தொழிலுக்கு இழிமை செய்வதாம். அவர் பொதுமக்களுக்குச் சம்பளத்துடன் தொண்டு செய்ய வாய்த்த வாய்ப்பாக அலுவல் புரிய வேண்டும்.

தம் பெற்றோர் தம் உடன் பிறந்தோர் தம் தாத்தா பாட்டியர் தம்மக்கள் எனத் தம்மை நாடி வருபவர்களை மதித்து அவர்களுக்கு முறைப்படி செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும். அவர்களைப் பல்கால் அலைய விடுவதோ, நிற்கவைத்தும் காக்கவைத்தும் கடிந்து பேசியும் கையூட்டுப் பெற்றும் செய்ய வேண்டிய கட்டாயக் கடமைகளைச் செய்வது தம் முகத்தில் தாமே கரியைப் பூசிக் கொள்வதாம்.

தம்மிலும் கற்றவர், பண்பாளர், அலுவலராகவும் இருந்தவர் தம்மை நாடிவந்ததால் அவர்கள் மனம் சஞ்சலப்படச் செய்தாலும் தமக்குச் சிறுமை தாமே தேடிக் கொண்டவர் ஆவர்.

நேரிய செயலைப் புரியவும் இழுத்தடிப்பதும் எதிர்பார்ப்புடன் செய்வதும் கட்டாயம் ஒரு நாள் இல்லையானாலும் ஒரு நாள் குற்றவாளியாய் நிற்க வைக்கும் என்னும் நேரிய எண்ணம் நெஞ்சில் என்றும் இருப்பவராக இருக்க வேண்டும்.

தமக்கு மேல் அலுவலர்க்குத் தரகராக இருந்து தீய, வேண்டாத செயல் செய்பவரும் குறுக்கு வழியில் உதவுபவரும் கயமைக்குத் துணை போபவரே ஆவர்.

முறையாகச் செய்ய வேண்டியதைச் செய்யாமல் முறைகேடராய் இருப்பார் அறக்கேடரே ஆவர்.

நேர்மையை மதிக்கும் அலுவலர் பந்தாடப்படலாம் ஆள்வோரால்! ஆனால் அதற்காக அஞ்சி நேர்மையைப் பந்தாடுபவராக அலுவலர் ஆகிவிடல் ஆகாது. அப்படி ஆவது அவரும் அந்நேர்மையற்றவர்க்குத் துணை போகியவர் ஆகவே கருதப்படுவர்.

அலுவலர்க்கு என ஒரு தகுதி உண்டு. ஆனால் ஆட்சியர் அரசியலர் கட்சியர் என இருப்பார்க்கு எத்தகுதியும் இல்லை. எவரும் ஆட்சிக்கு வரலாம்! அவர்க்கு ஒத்தூதியாகக் கடமை செய்பவர் பொதுநலக் கேடரே ஆவர்! ஓய்வு பெறும் நாளில் ஓயா உளைச்சல்காரராய் வெளியேறிப் பொதுமக்களால் காறி உமிழப்படுவார்.

இன்று ஆள்பவர், நாளைத் தோல்வியைத் தழுவி, பதவி இழப்பர். அவரை நம்பிச் செயல்படுவார் அடுத்தவர் ஆட்சிக்கு வரும் போது எதிரீட்டுப் பார்வைக்கு இடமாக நேரும் என்பதை மறந்துவிடல் ஆகாது. இவரைப் போல் அலுவலர் உண்டா? காணமுடியுமா? எனப் பொதுமக்கள் போற்றும் இனிய பேற்றை எவர் பெறுவாரோ அவரே கடமை உணர்ந்து செயலாற்றிய செம்மையான அலுவலர் என்பது அழியாப் பேறாகும். அதனைப் பெறுதலே அலுவலர் கடமையாம்.

❀❀❀

22. உழைப்பை ஊக்கல்

உழைப்பு, இயற்கை இயங்கியல் கண்டார் உடைமையாம். கதிரோ மதியோ மண்ணோ தம் சுழற்சியில் ஓய்கின்றனவா? சேவல் கூவி ஊரை எழுப்புகிறதே அதற்கு என்ன அலுவல் - வேலை - என உண்டா?

எறும்பும் தேனீயும் சோர்ந்து கிடக்கப் பார்க்கிறோமா? இயங்கா ஒன்று - உழையா ஒன்று - உயிருடையதாக ஆகுமா? உழைப்பு இல்லாதவர் உண்ண உரிமை யற்றவர்! வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடர்!

உழையார் உடல், நோயுடல்! வலிமை இழந்த உடல்! தனக்கே பயன்படாமல் கெட்டொழியும் உடல்! படிக்கும் படிப்பில் அக்கறை இல்லாமல் ஊர்சுற்றி உழைப்புக் கேடன் மட்டுமா? பிழைப்புக் கேடன் இல்லையா?

உழவுத் தொழிலாளன் உழைப்பை அவன் நிலம் காட்டுமே! அவன் வளர்க்கும் மாடு காட்டுமே!

உழைப்பவன் தன் உழைப்பு மேன்மையால் சோம்பனையும் உழைப்பன் ஆக்கிவிடுவான்! அவனை இணைத்துக் கொண்டு உழைப்பாளி ஆக்கி விடுவான்.

உழையாமல் கெடுப்பது, உழையானுக்கு உதவும் உதவி - உண்ணும் சோறு - பிச்சைக் காசு!

உழைப்பவனுக்கு உரிய சம்பளம் தாராக் கருமி, புண்ணியம் என்னும் கருத்தால் உழையாக் கூட்டத்திற்குச் சோறு வழங்கல், உழைப்பைக் கெடுத்தலாம்.

பிச்சைக்காரரைப் பெருக்குபவர், உழைப்பைச் சுருக்குபவர். உழைக்க இயலார்க்கும் இயற்கைக் கேட்டால் வறுமைப்பட்டுக் கிடப்பவர்க்கும் உதவுதல் அறம். அதே பொழுதில் உழைக்க முடிந்தவர்க்கும் குடித்துக் கெடுவார்க்கும் உதவுதல் நாட்டு நலத்தைக் கெடுக்கும் கேடு!

உழைப்பவரைச் சுரண்டாமை - செல்வத்தைக் குவித்துப் பரம்பரைக்குச் சேர்த்துவைக்காமை - உழைப்பாளரால் தான், தன் செல்வச் செழிப்பு அடைந்ததை எண்ணி வருவாயில் பங்கு தருதல் என்பவை உழைப்பை ஊக்கும் வகைகள்!

உழைப்பவர்க்கு நேர்ச்சி ஏற்பட்டாலோ, நோய் நொடி ஏற்பட்டாலோ உதவுதல் அவர் உழைத்த உழைப்புக்குச் செய்யும் நன்றிக் கடனாம். உழைப்பவனுக்குக் கூலியைக் குறைத்தால், 'நீ வேலையைக் குறைத்துக் கொள்' என்று அவனுக்குச் சொல்லாமல் சொன்ன ஆணையாம்!

அளவுக்கு மேல் வேலை வாங்கிக் கூலியைக் குறைப்பவன் தனக்குத் தானே உழைப்பாளர் பகையை - வெறுப்பை - உண்டாக்கி, வன்முறைக்கும் தூண்டியவன் ஆவன்! உழைப்பவனால் தான் உயர்வெல்லாம் என்று எண்ணுவான் - எண்ணிக் கடனாற்றுவான் - உழைப்பை ஊக்குபவனாக விளங்குவான்.

❀❀❀

23. பொதுத் தொண்டு

தொண்டு என்பது மலையைப் புரட்டல், மணலைக் கயிறாகத் திரித்தல் போல்வன அல்ல. இடறி விழ இருப்பார்க்குக் கைதருதலும் தொண்டே. சாலையில் கிடக்கும் வாழைப் பழத் தோலை எடுத்தெறிவதும் தொண்டே. வழியறியார் தமக்கு உரிய வழிகாட்டலும் தொண்டே. சாலையில் காணும் குண்டு குழிகளை மண்போட்டு நிரப்புதலும் தொண்டே!

தொண்டு என்பது வாயில் உள்ளது; நெஞ்சில் உள்ளது; காலில் கையில் உள்ளது. நோய் வாய்ப்பட்டுக் கிடப்பவர் நலம் பற்றிக் கேட்டலும் தொண்டே. அழும் குழந்தையை அமர்த்தலும் தொண்டே!

ஏன்? களங்க மிலா நெஞ்சும் கறையிலாச் சொல்லும் தொண்டே என்றால் வேறு என்ன சொல்ல வேண்டும்.

வீட்டிலேயே தொண்டு உண்டு! வெளியேயும் தொண்டு உண்டு! வீட்டில் செய்வது தொண்டு இல்லை; வெளியில் செய்வதே தொண்டு என்பது இல்லை!

ஒருவர் ஒரு வேலையாக இருக்கும் போது, அவர் செய்ய வேண்டும் வேலையை எடுத்துக் கொண்டு செய்வது தொண்டு இல்லையா? கடைக்குப் போகும் போது பக்கத்து வீட்டுக்காரர்க்கு வேண்டும் பொருளும் வாங்கிக் கொண்டு வருதல் தொண்டு ஆகாதா?

நன்றாகப் படிக்கும் மாணவன் சற்றே தகுதி குறைந்த மாணவனுக்குப் படிப்பில் உதவுதல், அவனைத் தெளிவுடையவனாக்கல் தொண்டு இல்லையா?

தொண்டன் ஓயான்; ஒழியான்; சோம்பிக் கிடவான்; சோர்ந்து கிடப்பானைத் தன் தூண்டலால் சுறு சுறுப்பன் ஆக்கிவிடுவான் பிறவித் தொண்டன்.

எதையோ பார்த்துத் தொண்டு செய்யான். தொண்டு செய்வது தொண்டுக்கே என்பவனுக்குப் பொருள் சேரும்; புகழ்சேரும்; நட்புச் சேரும்; நல்லோரும் சேருவர்; அவன் தொண்டு விரிய உதவிகளும் எண்ணாத வகையில் எல்லாம் எய்தும்! உண்மையான தொண்டனை ஊர்மதிக்கத் தவறிய தில்லை; தொண்டனுக்கு இவர் அவர் என்ற வேறுபாடு இல்லை! இன்ன பொழுது அன்ன பொழுது எனக் காலம் இல்லை! இச் செயல் அச்செயல் என்றும் உயர்வு தாழ்வும் இல்லை!

தொண்டால் மகிழ்பவன் வீடு பேற்றாளன்! தன்னலம் இல்லாத் தகைமையாளன்! மழையும் வெயிலும் காற்றும் போலப் பொதுமை நிலையன் தொண்டன். வீடே பொதுத் தொண்டின் பயிற்சிக் களம்! தொண்டுக்காகத் தொழிலை விட வேண்டியதில்லை. உள்ளதை இழக்க வேண்டியதில்லை. ஊரைக் கூட்ட வேண்டியதும் இல்லை. இயன்ற தொண்டை இனிய பேறாகக் கருதிச் செயல்பட்டாலே வெற்றியான தொண்டுதான்!

❀❀❀

24. தொழிலாளர் கடமை

தொழிலாளர் என்பது பொதுமை சுட்டும் பெயர். உடல் உழைப்பா, மூளை உழைப்பா, நிலத்தில் உழைப்பா, நிழலில் உழைப்பா, அலுவல் உழைப்பா, அயல்நாட்டு உழைப்பா எல்லாமும் உழைப்பே.

உழைப்பவர் தம் கடமை உணர்ந்து தம்மால் முடிந்த அளவில் அரை குறை வைக்காமல் உழைத்துத் தாமும் வாழ்ந்து உலகையும் வாழ வைக்கும் அருமையர் எவரோ அவர் உழைப்பாளர் மட்டும் அல்லர். தவம் செய்பவர். அவர் குடிதாங்கியாக இருந்து சுற்றம் தாங்கியாக வளர்ந்து. நாடு தாங்கியாகச் சிறந்து உலகம் தாங்கியாகும் உரவோர் ஆவர் என்கிறார் வள்ளுவர்.

“உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுக” என்றே எண்ணி எழுதி வழிவகுத்துத் தந்த பொருளியல் மீட்பர் காரல் மார்க்கசர்! உழவோர் வாழ்க்கையை உரைத்தது தொல்காப்பியம். உழவதிகாரத்தில் ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’ என்ற வள்ளுவர், ‘உலகத்தார்க்கு ஆணி’ என்றும் கூறினார். ‘உழவினார் கைம்மடங்கல் ஆகாது’ என்றும், ‘கை செய்தூண் மாலையவர்’ என்றும், ‘இரவார் இரப்பார்க்கு ஒன்று ஈவர்’ என்றும் பாடினார். கம்பர், ஏரெழுபது, திருக்கை வழக்கம் என்னும் நூல்களை இயற்றினார்.

பின்னாளைப் பாரதியார்,

‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் – வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்’

என்றார். வீறுமிக்க தொழிலாளர் உழைப்பாளர் நிலையை உலகப்பன் பாடலில் உரத்துக் கூறினார் பாரதிதாசனார். நாமக்கல் கவிஞர்,

“கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்”

என்றார்.

உழைப்பாளர் உழைப்பே நம் ஒவ்வொரு கவள ஊணும், உடையும், உறைவிடமும் ஆகும் என்பது வெளிப்படை உண்மை.

உழைப்பவர் புகை பிடிப்பதே கேடு! மதுக்குடியில் மயங்கிக் கிடக்கும் நிலையை அரசே முன்னின்று கொடுப்பது திட்டமிட்டே செயலையும் சிந்தனையையும் முழுதுறக் கெடுக்கும் கேடாகும்.

"குடி, வீட்டையும் கெடுக்கும் நாட்டையும் கெடுக்கும்"

என எழுதிப் போட்டுக் கொண்டே குடிக்கடைகளைத் தெருத்தோறும் திறக்கும் அரசு கொடுங்கோல் அரசு அன்றிச் செங்கோல் அரசு ஆகுமா? பொதுச் சொத்தைக் கொள்ளையடித்துக் குவிப்பானை ஒடுக்கி ஒழிக்காமல் அவன் கொள்ளையில் பங்கு கொள்ளலுக்கும் குடிகொடுத்துக் கெடுப்பதற்கும் என்ன வேறுபாடு?

அறிவுடையவர்கள், ஆடவர் பெண்டிர் என அனைவரும் வெள்ளமாகத் திரண்டு நின்று அழித்து ஒழிக்காவிடின் தொழிலாளர் வாழ்வு சிறக்காது. தொழில் வளம் ஓங்கவும் ஓங்காது. கையேந்தும் வாழ்வினராகவே காலமெல்லாம் இருந்து காலம் வருமுன்னரே வாழ்வை முடித்துக் கொள்பவராகவே இருப்பர் என்பது உண்மையாம்.

❀❀❀

25. செல்வர் கடமை

செல்வர்களுக்குத் தாம் செல்வரான வகை பற்றிய எண்ணம் முதற்கண் வர வேண்டும். செல்வம் மேலும் குவிக்கும் எண்ணம் உள்ளதா அல்லது தேடிய செல்வம் போதும் என்னும் எண்ணம் ஏற்பட்டுள்ளதா? அல்லது ஏற்படவாவது செய்யுமா?

நம் கடிய உழைப்பால் தேடப்பட்டதா? அல்லது உழைப்பவர் வழியாகத் தேடப்பட்டதா? நேர்வழியில் வந்த செல்வமா, அல்லது குறுக்குவழியில் வந்ததா? ஊரவர் அனைவரும் வாங்கிய வணிகத்தால் வந்ததா? தம் பயிரீட்டு விளைவு வகையால் வந்ததா?

வட்டி, வகையால் வந்ததா? வாசி (வட்டிக்கு வட்டி) வகையால் வந்ததா? இப்படி எண்ண மாட்டார், எண்ணினால் தம் கடிய உழைப்பால் அன்றி வந்த செல்வமெல்லாம் சமுதாயத்தால் வந்ததே என எண்ணின் அச் சமுதாயத்திற்கு - பொதுத் தொண்டுக்கு, அல்லது வேண்டத்தக்க அறச் செயல்களுக்குச் செலவிட்டுப் பேரும் புகழும் எய்துவதே செல்வப் பேறு எனக் கொண்டு கொடையாளராகத் திகழ்வார்.

அடுக்கிய கோடி சேர்த்து அடுத்த ஐம்பது பரம்பரையை உழையாச் சோம்பராக்கியும் சமுதாய ஆக்கப்பாட்டைக் கெடுத்தும் 'பாவி' என்னும் பட்டம் பெற்றுப் போயொழிய மாட்டார்.

'செல்வத்துப் பயனே ஈதல்' என்பதும், 'ஈதல் இசைபட வாழ்தல் உயிர்க்கு ஊதியம்' என்பதும் உணர்ந்து அறவோராக - அருளாளராக விளங்குவார்.

அன்புடைமை, அருளுடைமை, ஆள்வினை உடைமை, அறிவுடைமை ஊக்கமுடைமை முதலாகப் பத்து உடைமைகள் வைத்த திருவள்ளுவர் பொருளுடைமை என ஓர் அதிகாரம் வகுக்காமைக் காரணம் உணர்ந்தால், எச்சமுதாயத்திற்கு உரிமைப் பட்டதோ அச்சமுதாயத்திற்கே, பொருள் பயன்பட்டதாக்க வேண்டும் என்று எண்ணிப் பொருளைச் செலவிட வேண்டும் வகையால் செலவிட வேண்டும். அதுவே முறைமை! இல்லை எனின், பொருட்கேடர் குடும்பக் கேடர், சமுதாயக் கேடர், அறக்கேடர், பொதுமைக் கேடர் என்பதாம்.

பொருளைப் போற்றுபவர் திருவள்ளுவர். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றவர் அவர். பொருள் என்னும் பொய்யா விளக்கம் என்றவரும் அவர். ஊருணியாய், பயன்மரமாய், மருந்து மரமாய், மழைப் பொழிவாய்ப் பொதுவில் பயன் செய்ய வேண்டும் என்று தெளிவு படுத்தியவரும் அவர். பொருட் செல்வம் செருக்கர், கருமியர், பாவப் பிறவியர் தம்மிடத்தும் உண்டு! ஆனால் ஈகையும் அருளும் கொடையும் மேலோரிடத்தேயே உண்டு என்றும் கூறினார். அம்மேலோராக விளங்குவதே செல்வர் கடமையாம்.

❀❀❀

26. இரவலர் ஆக்காமை

"அது இல்லை இது இல்லை" என்னும் எண்ணம் வந்து விட்டாலே இரவலர் ஆகிவிட்டார் என்பது தான் பொருள். உழைத்து உழைத்து உயரவல்ல கையை ஏந்திப் பிழைக்க வைப்பவர், இலவசத்தார் - பிச்சையிடுவார் – 'அன்னதானம்' செய்வார் – உழையாமல் உழைத்ததாகக் கணக்கெழுதிக் கொடுப்பதைக் கொடுக்கும் வேலை இடைத்தரகர் ஆயோர் இரவலர் ஆக்குவோர்.

எந்த முதியரும் இயன்ற வேலை செய்ய முடியும். வேலை செய்யாமல் உணவுண்டும் காசு சேர்த்து வட்டிக்கு விட்டும் வாழலாம் என்னும் நிலைமை நாட்டில் உண்டாகி விட்டால், உழையாச் சோம்பர், உழையா ஊணர் பெருகவே செய்வர்.

உழைப்பவர் எண்ணிக்கை சுருங்கவே செய்யும். உழவடை முதலாம் வேலைகளுக்கு ஆள்கிடையாமல் தட்டுப்பாடே ஏற்படும், ஆள் கிடைத்தாலும் அவர்கள் கேட்கும் கூலி கொடுக்க முடியாமல் முட்டுப்பட்டும் தொழில் முடங்கிப் போகும்.

ஒருபக்கம் உழையாச் சோம்பர், ஒரு பக்கம் உழைப்பார் கிட்டாத் திண்டாட்டம், இவற்றின் இடையே தொழில் இயக்கப் பாதிப்பும் – இழப்பும் இல்லாமல் தீரா!

இரப்பது இழிவு என்னும் எண்ணம் ஒழிந்து போனால் இரப்பவர் தொகை பெருகவே செய்யும். அதனை ஏற்படுத்துவது அரசு என்றால் நாடே பிச்சைக்கார நாடு ஆகாமல் தீராது.

பிச்சை எடுத்தும் வாழ வேண்டும் என்னும் நிலையை ஓர் அரசே உண்டாக்குமானால் அவ்வரசே ஒழிந்து தொலையட்டும் என்று சாவித்த வள்ளுவ மண் இது!

மானம் உள்ளவர், "இலவசம் வேண்டா; வேலை கொடு; கல்வி இலவசம், மருத்துவ இலவசம் வேண்டும்! ஊண் இலவசம், உடை இலவசம் முதலியவை வேண்டா என்று பொதுமக்கள் ஓங்கிக் குரல் எழுப்ப என்று துணிவார்களோ அன்றே வாக்குப் பொறுக்கி அரசியலுக்கு முடிவுவரும்!"

இலவசம் ஆக்குவதற்கு மூலத் தொகை எப்படி வருகிறது? குடியால் வருகிறது. சுரண்டலால் வருகிறது! என்ன சுரண்டல் மணல் சுரண்டல்! கரிக் கொள்ளை, ஒப்பந்த வேலைக் கொள்ளை, அதைச் செய்தோம் இதைச் செய்தோம் எனச் செய்யாமல் பொய்க் கணக்கெழுதிக் கொண்ட தொடர் கொள்ளை இவற்றால் கோடி கோடி, பல்லாயிரம் கோடி என்னும் மக்கள் பணக் கொள்ளையால் கொள்ளப்படுவது. நல்லரசு தன் மக்களை இரவலர் ஆக்காது! பெற்றதாய் தன்மக்களைப் பிச்சைக்காரர் ஆக்குவளா? ஆக்கினால் தாயா?

❀❀❀

27. இழிவு

ஓரிடத்தில் களவு போனால் அவ்விடத்துக் காவல் துறைக்கு இழிவு. எல்லா இடங்களிலும் பரவலாகக் களவும் கன்னமிடலும், கடத்தலும் கொள்ளையும் நடைபெற்றால் காவல்துறைத் தலைமையர், உளவு பார்ப்பவர், அத்துறை அமைச்சர் ஆகிய அனைவருக்கும் இழிவு! மொத்தத்தில் இறையாண்மைக்கே இழிவு!

“ஆட்சி நடத்தும் தகுதி உங்களுக்கு அறவே இல்லை என்பது வெளிப்பட்டுவிட்டது; எங்களை முழுதுற எதிர்த்த காந்தியை நாங்கள் ஆளுகை நடத்திய நாளெல்லாம் காத்தோம்! உங்களிடம் ஆளுகை தந்த ஆண்டு கடக்குமுன்னே சாகடித்து விட்டீர்களே; இதற்குமேல் உங்கள் இறையாண்மைக்கு என்ன சான்று வேண்டும்.” என்று கொள்ளையனும் கொடுமையனுமாக இருந்த வெள்ளையன் வினாவினானே! இல்லையா? களை பறித்தெறியா உழவன் விளைவு காண்பானா? முள் மரத்தை முளையிலேயே கிள்ளாதான் முயற்சியாளனா?

களை பறிக்காமல் விட்டுவிட்டுப் பயிர்பறிப்பானும், முள்மரத்தைக் கிள்ளாமல் நயத்தகு பயன்மரத்தைக் கிள்ளுபவனும் உலகிலேயே உயர்ந்து நிற்கும் முதன்மை நாடு இந்தியம் என்றால், அதில் முதன்மை மாநிலம் தமிழ்நாடு என்றால், தமிழ்நாட்டு ஆட்சிக்கு முத்திரைப் பதிவு வேறு வேண்டுமா?

சங்க இலக்கியமாம் பத்துப் பாட்டு எட்டுத் தொகை ஆகியவற்றிலும் அதற்கு முந்தை இலக்கணமாம் தொல்காப்பியத்திலும், உலக அற நூலாம் திருக்குறளிலும் ‘ஊழ்’ உண்டு! முறைமை, கட்டொழுங்கு, உலகத்து இயற்கை என்னும் பொருளில் வருவது அது. ஊழல் என்னும் சொல், ஓரிடத்தும் இடம் பெறவில்லை. இதுகால் ஊழல் இடம் பெறா இடமே இல்லை எனலாயது!

தலைமை எப்படி? நாட்டு நிலைமை அப்படி! தலைமைகளே நாற்றமெடுத்த ஊழல்கள் என்றால் கீழே உள்ளவைகளைக் கேட்க வேண்டுமா? கீழே உள்ள ஊழல்களின் பங்களிப்பு, தலைமைக்கு என்றால் (மனச்சான்றுடன் எண்ணுவார்க்கே ஒப்பமுடியும். மனமே செத்துப் போனவர் எண்ணுவரா?) அந்த இழிமை நாட்டின் இழிமையல்லாமல் தனி இழிமையா? வெள்ளையன் ஆட்சியினும் இக் கொள்ளையர் ஆட்சி எவ்வகையில் மேம்பட்டது? இதற்காகவா விடுதலைப் போராட்டமும் விடுதலையும்?

❀❀❀

28. ஆசிரியர் கடன்

பள்ளி ஆசிரியர் ஆசிரியர் அல்லர். தெய்வ வடிவர்; தெய்வ வாழ்வர்; நெற்பயிர் நாற்றங்கால், பூப்பதியன், பயன்மரப் பண்ணை ஆயவற்றை ஆக்கி உரிய வகையில் நட்டும் ஊன்றியும் உரமிட்டும் காக்கும் ஆறறிவுப் பயிர் வளர்க்கும் நல்லோர் உழவர்! அவர் கடமை யாற்றலே நாட்டின் எதிர்கால மேன்மை!

ஆசிரியர் நிலை மலைமேல் விளக்காகத் திகழ வேண்டும். கண்ணொளி திறக்கும் ஒளி மிகு மருத்துவர் அவர்! அவர் கடன் தந்நலக் கடன் அன்று!

பணம் திரட்டல் வணிகர் அல்லர்! பணம் குவிக்கும் ஆலை நிறுவனர் அல்லர்! ஆட்சி அதிகார ஆணவர் அல்லர்! கட்சிக் கொடி ஏந்தும் அரசியலர், கட்சியர் அல்லர்! பிறவித் தொண்டர்! அறவர்! வாழும் தாயுமானவர்! கல்விக் காவலர் மட்டுமல்லர், பண்பாட்டு வித்தும் விளைவும் ஆயவர்; ஆக்குபவர்! தாம் ஆசிரியர் தாமா? என்பதையோ, ஆசிரியக் கடமை புரிபவர்தாமா என எண்ணுவாரா? எண்ணாதவர் கேடரில் கேடர்! நற்பயிர்க்கு நலிவூட்டிக் கெடுக்கும் நோயர்!

உடற் கொலையினும் உள்ளக் கொலை கொடுங்கொலை! அதுவே ஊர்க் கொலையாகிவிட்ட உருவர்! எதிர்கால நல்லுலகம் எம்மை நம்பி உள்ளது என நம்பிப் பணியாற்றாதவர் ஆசிரியப் பணியை விட்டுவிட்டு அவர் நிலைக்காம் பணியோ தொழிலோ செய்தல் அறமாம்! முறைமையுமாம்!

பசுத்தோல் போர்த்த புலியாய் இருப்பதனினும் புலியாகவே இருப்பது பழிப்பற்றது, பாவமும் அற்றது! ஏனெனில் புலி அப்படித்தான் இருக்கும் என்னும் உண்மையது அது.

நாடாளும் வேந்தன் - பொது எனப் பொறாது தன்னொருவனதே நாடு என்பவனும் 'அவன்' என்றே வழங்கப் பட்டான். ஆனால், ஒரே ஒரு பாடல் பாடிய புலவரும் 'அவர்' என்றே வழங்கப்பட்டார்! சான்றோர் என்றே சாற்றப் பெற்றார்! அப்பெருமைக் குரியவர் ஆசிரியர் என எண்ணின் நிலைதாழார்!

தந்தையாய், தாயாய், வழிபடு தெய்வமாய், கண்ணொளி திறக்கும் கதிராய் ஆசிரியர் திகழ்ந்தால் நாட்டில் இன்றுள்ள கேடுகள் தலைகாட்டி யிரா! அரசியல் சேறு, கட்சிச் சாய்க்கடை, சாதிசமயச் சழக்கு, பொருட் கொள்ளைக் கயமை, சால்பிழந்த இழிமை ஆகியவற்றை ஏறிட்டும் பாராதவராய் ஆசிரியர் இருந்திருப்பின் இந்நிலை நாட்டில் எய்தா? தானே கற்றவனையும் கட்டைவிரல் வாங்கிய கயமையன் போற்றப்பட்ட நாட்டின் மீட்டெடுப்பு அரிதே! ஆயினும் முடியாத தன்று!

❀❀❀

29. எழுத்தாளர் கடமை

எழுத்தர் வேறு; எழுத்தாளர் வேறு! எழுத்தாளர் படைப்பாளி! படிப்பாளியரைப் படைப்பாளியாக்கும் திறமான எழுத்தாளரே எழுத்தாளராம்!

பொதுமக்கள் வழங்கும் கொச்சை நடை - வழுநடை. அவர்களுக்குப் புரிய வேண்டும் என எழுதும் இழிநடை - அவர்தம் பேச்சு நடையையும் மேலான தாக்கும் மொழிக்கலப்பு நடை - மொழிக் கேடாம் எழுத்தை வலிந்து எழுதும் நடை - ஆகியவற்றை எழுதுபவர் எழுத்தாளர் அல்லர். மொழிக் கேடர்!

புதுப்பாவா, உரைப்பாவா, துணுக்கா எதையும் எழுதலாம். ஆனால் மொழியில் கலப்படம் - எழுத்தில் கலப்படம் - பாலின அருவறுப்பு என்பவற்றைக் கொள்வார் மொழிக் கொலைஞர்! எழுத்தாளர் ஆகார் அவர்!

செந்தமிழாக எழுதினால் புரியாது - தனித்தமிழாக எழுதினால் விளங்காது என்பவர் எழுதும் திறம் கெட்டவரே அல்லாமல் மொழித் தேர்ச்சியர் ஆகார்.

மரபுப் பா செல்லாது என்பவர்கள், கம்பனைப் போல் வள்ளுவரைப் போல் இளங்கோவைப் போல் பாவலரைப் பூவுலகெங்கும் கண்டதில்லை என்னும் பன்மொழி வல்ல பாரதி - வசன கவிதை எழுதிய பாரதி - நாட்டுவிடுதலைப் பா - காப்பியம் எனப் படைத்த பன்முகப் பாரதியை எண்ணிப் பார்க்க வேண்டும்! பாவேந்தர் பாரதிதாசனார் படைப்புகளைத் தோய்ந்து கற்க வேண்டும்! தங்கள் இயலாமையைத் தமிழின் இயலாமை ஆக்கும் சிறுமையை விடுவர். ஆனால் அவர்கள் பாரதியாரைப் பெருமைக்காகப் பேசிக் கொள்வதை அன்றிக் கொள்கைக்காகப் பற்றிக் கொள்பவர்கள் இல்லையே!

எழுத்தாளர் கடமை பெரிது. அவர்தம் எழுத்து அரசையும் ஆட்டங் கொடுக்க வைப்பது! வேலையும் வில்லையும் அன்று! வெடிகுண்டு வகைகளையும் வெல்ல வல்லது. அழியும் வாழ்வை அழியா வாழ்வு ஆக்க வல்லது! கடையரையும் கடைத் தேற்ற வல்லது! போரிடும் கேடாம் உலகையும் பொதுமைப் பொலிவுடைய தாக்கிப் புகழ்வாழ்வு வாழச் செய்வது!

கருவி உயர்ந்த கருவி! அக்கருவியை எடுத்தவர் அறிவு - பண்பு - ஆக்கச் செயல் - ஆயவற்றைப் பொறுத்து அமைவது! ஊடகங்களுள் எல்லாம் தலையாய ஊடகம் எழுத்தாக்க ஊடகம் என்பதை எண்ணி எழுதுதல் எழுத்தாளர் கடமையாம்.

❀❀❀

30. தாய்மொழி வழியே கல்வி, வழிபாடு முதலியன

“தாய்ப்பால் குடித்தவன் நோய்ப்பால் வீழான்” என்கிறது அறிவியல் உலகம்.

தாய்மொழிக் கல்வியே தகுவதாம் கல்வி என்கிறது அறிவர் உலகம்! தாய்மொழி வழிச் சிந்தனையே சிந்தனைவளம் என்கிறது சிந்தனையாளர் உலகம்.

தாய்மொழிக் கல்வி அடித்தளம் கொண்டே மேல்மாடிகள் எழுப்பப்பட வேண்டும் என்கின்றனர் பன்மொழி வல்லார்!

படைப்பாளர்களின் உயர் படைப்பெல்லாம் தாய் மொழி வழிக் கிளர்ந்தே அயன்மொழிப் பெயர்ப்பாய் உலகப் பரவுதல் ஆயமை கண்கூடு.

உலகின் முதன்மொழி, பன்மொழிகளுக்கும் தாய்மொழி தமிழ். உலகின் மூத்த இனம் தமிழினம், ஆயினும் அம்மொழிக்கும் அவ்வினத்திற்கும் உரிய தகுதி இல்லாமை ஏன்?

தன்தகவு உணராத் தடிப்பு, தான் தான் என்னும் தான் தோன்றித் தனத்தால் ஒன்றுபட்டு நில்லாமை, அழிம்பு செய்வதே எம் பிறவி என்னும் வாழ்வுடைய அயன்மைப் பிறவியர் அயராத் தொடர் தந்நலச் சூழ்ச்சி என்பவற்றால் உரிய தகுதியைப் பெற்றிலது.

குடியாட்சியோ இந்தியம் என்பது இந்தியே என்னும் வெறிமைக் கொள்கையை அடிநாள் முதல் கொண்டு தன் நாட்டிலேயே மற்றை மொழிகளைத் தீண்டா மொழியாய் அடிமை மொழியாய் ஆக்கி வைத்துத் தொடரும் ஆக்கக் கேடு!

இவற்றை ஒழிக்கும் துணிவு - ஒருமை நோக்கு - உரத்த குரல் - மாநில அரசுக்கு இல்லாமல் பதவிக்காக மாரடிக்கும் சிறுமைப் போக்கு! தேசியம் என்னும் இல்லா ஒன்றை இருப்பதாக எண்ணி ஆட்சி இல்லை எனினும் ஆணவராக நிற்கும் ஆகாக் கெடுமை!

மீண்டும் உரிமைப்போர் செய்ய வேண்டிய நிலைமை இருந்தும் குடியிலே பொதுமக்களும், சின்னத் திரையிலே பெண்களும், திரைப்பட நடிகத் தலைமைக் கீழ் வீறு காட்டும் இளைஞர்களும், எது என்ன ஆனால் என்ன? எப்படி ஆனால் என்ன? என்னும் அறிவறிந்த முதியவர்களும் அடிமைப்பட்ட அலுவலர்களும் இருந்தால் தாய்மொழி வழியே கல்வி கற்பிக்கப்படுமா, வழிபாடு செய்யப்படுமா?

அக்கறைப்பட வேண்டியவர்கள் அக்கறைப்படா விட்டால், ஆகச் சுருட்டுவார் தொடரத் தானே செய்வர்? தாயைப் பிச்சைக்காரியாகத் துரத்தும் தடித்தனம், தாய் பெற்றதாக இருக்கவே இருக்காது!

❀❀❀

31. தாய்மொழி வழியே சடங்கு முதலியவை

ஒவ்வொரு குடும்பச் சடங்கும் தாய்மாரே நடத்தியமண் தமிழ்மண். 1946 ஆம் ஆண்டில் நிகழ்ந்த திருமணம் தாய்மார்களால் நடத்தப்பட்டதே. தாய்த் தமிழில் நடத்தப்பட்டதே.

106 வீடுகளையுடைய எங்கள் ஊரில் தாய்மார்கள் தமிழில் நடத்தி வாழ்த்தியது அன்றிப் புகை மணம், அம்மி மிதிப்பு மணம், காசி நடை மணம் நடந்ததே இல்லை. அப்படி இனத்தவர் தாமும் தம்மியல் கெடச் செய்தது பட்டண நாகரிகம்! படித்தவர், பணக்காரர், பதவியர் செயல்கள்! சின்னத் திரைகள் வீட்டுள் கொட்டிய குப்பைகள்!

சொல்பவனுக்கும் என்ன சொல்கிறோம் என்பது புரியாது! கேட்பவர்க்கோ புரியவே புரியாது! புகை மூட்டம் போட்டால் சரி! முடிந்தது நிகழ்ச்சி! தட்டில் காசு போட்டால் சரி, அம்மா பார்த்துக் கொள்வாள்; எல்லாம் நடக்கும்! பரம்பரை பரம்பரையாய் ஏய்த்துப் பிழைக்கத் திட்டமிட்டே நடத்தப்படும் வஞ்சகப் போலிமை நாடகம்!

அப்படிச் செய்யா விட்டால் குடும்பத்துக்கு ஆகாது; ஊருக்கு ஆகாது; மழை பொழியாது; மகப்பேறு ஆகாது!

புகை போட்டுச் செய்யும் சடங்கர் வீட்டிலே இறப்பு இல்லையா? கைம்மை இல்லையா? அவருக்கு நோய் நொடி இல்லையா? அவர் குடும்பம் மருத்துவமனைக்குப் போகாமல் மருத்து சாப்பிடாமல் உள்ளதா?

அவர்கள் பிறப்பும் மற்றவர்கள் பிறப்புப் போலத் தானே பிறக்கிறது. அவர்கள் நீரும் மலமும் வியர்வையும் சந்தனமும் பனிநீருமா? செத்தபின் எரியூட்டப் பட்டால் எல்லார் சவத்திலும் நாற்றம் தானே!

சின்ன அளவிலாவது வேறுபாடு உண்டா? ஏய்த்துப் பிழைப்பது தானே வேறுபாடு; வேறென்ன வேறுபாடு!

தெய்வ மொழியாம்! தெய்வப் பிறவியாம்! நேரே அவர் தெய்வத்திடம் பேசுவாராம்! பொய்யோ, களவோ, கொலையோ, ஒழுக்கக் கேடோ இல்லாதவரா? மதுமயக்கு, சூதாட்டு, குற்றக் கூண்டேறல் இல்லையா?

புதுமனை திறப்பு - பூப்பு நீராட்டு - தொட்டிலில் போடுதல் - சோறூட்டல் - இவை செய்யவுமா தாய் மொழி ஆகாது! தாய்மார் ஆகார்!

இசை மேடையில் புரியாத் தெலுங்கு – வடமொழிப்பாடல்! நீதி மன்றத்தில் – ஆட்சியில் – வழிப்பாதையில் – கடை விளம்பரத்தில் எல்லாம் எல்லாம் வேற்று மொழி! குடும்ப மொழியும் அப்படி ஆகத் தொடங்கியுள்ளது! 'அம்மா' எனவே கூடாதாம்! மம்மி, டாடி எனச் சொக்கிப் போகும் பெற்றோர், பெற்ற தாயை உயிரோடே புதைக்கும் பாவப் பிறவிகள் அல்லவா!

❀❀❀

32. துறவர் தொண்டு

துறவர் என்பார் இருவகையர்;அவர் மணந்த துறவர்; மணவாத் துறவர் ஆவர். எத்துறவர் எனினும் அவர் தொண்டரே.

மணந்த துறவர் வீட்டுக் கடமையொடு பொதுத் தொண்டும் கொண்டவர். மணவாத்துறவர் முழுதுறு தொண்டுக்கே உரியவர்.

இல்லறத்தை நல்லறமாக நடத்துதலும் தொண்டே. அவ்வறத்தோடு பிறர் பிறர்க்கு உதவுநராக இருப்பது மேம்படுதொண்டே. அவரும் அறுபதாம் ஆண்டு எய்தி மணிவிழாக் கொள்ளும் நிலையில் வீட்டைத் துறவாமல் உறவைத் துறவாமல் முழுதுறு தொண்டராகத் திகழ வேண்டும் என்பதற்கே அவ்விழா நிகழ்த்தப்படுவதாம். இது தொல்காப்பியர் நெறி; அவர்க்கு முந்தையர் வாழ்ந்து காட்டிய நெறி. அவர்க்குப் பிந்தைய வள்ளுவர் வகுத்துக் காட்டிய நெறியுமாம்.

தொண்டர்க்கு அடையாளச் சான்று அருள் நெறி பற்றல். ஆன்ம நேயராக விளங்குதல். எல்லா உயிரும் இன்புற்று வாழ வேண்டும் என்னும் பெருந்தகைப் பெருநிலைக் கடமைகளைப் புரிதலேயாம். பண்டை அறிவராம் சித்தர், சமயம் சாதி என்னும் எக்கட்டும் கடந்து உயிரிரக்கத் தொண்டே செய்தவர். ஊண் உடை உறைவு என்பவற்றிலும் எவர்க்கும் பாரமாக இராதவர். காய், கனி உண்டு, மானமறையாம் துணி கொண்டு நிழல் கண்ட இடம் தங்கி இயன்ற நலங்களெல்லாம் உயிர்களுக்குச்

செய்தவர் அவர். தம்மையே ஆய்வகமாக்கி நோய் தீர்க்கும் மருந்துகளைக் கண்டு அறிவ மருத்துவராகவும், ஒரு முகப்பட்ட ஓக நெறியராகவும் ஊர் பேர் தாமும் சொல்லாமல், வாழ்ந்தவர். ஓரிடம் நிலையெனக் கொள்ளாமல் காடே மலையே எனத் திரிந்தவரும் அவர். அத்தூய நிலையையும் போலிமையர் புகுந்து கோலம் காட்டிக் கொள்கை இழந்து போகவும் ஆயினர். கூடா ஒழுக்கத்தவராகவும் கொள்ளைப் பணம் குவித்தவராகவும் கொடி கட்டிப் பறந்தாரும் - பறப்பாரும் - ஆயினர்.

பொதுமக்களிடம் என்னென்ன மாசுகள், வன்புகள், போட்டி பொறாமைகள், அலை கொலைகள், சாதிமைச் சழக்குகள் உண்டோ? அவ்வளவும் கொண்டவராய் வழக்கு மன்றம் ஏறுபவர்களாய், தண்டனைக் குரியவர்களாய் ஆயினர். கோலம் கண்டு பொதுமக்கள் கெட்டொழிதல் பண்டேயும் உண்டு என்பதாலேயே தவமும் தவமுடையார்க்கு ஆகும் (தவக்கோலம் கொள்ளல் தவத் தன்மையர்க்கே ஆகும்) என்றும், ‘அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிது யாதும் இல்லை பெறுவான் தவம்’ என்றும் கூறினார் திருவள்ளுவர். ஒற்றறிதற்குரிய வழிகளுள் தவக் கோலத்தையும் சுட்டினார் எனின் போலிமையர் புதுமையர் அல்லர் என்பது விளக்கமாம்.

பிறவித் தொண்டர் பிறவா நிலையையும் வேண்டார். பிறவி வேண்டும் தொண்டுக்காக என்பதை ‘வீடும் வேண்டா விறல்’ என்பார் சேக்கிழார். தொண்டுக்கு வாய்ப்பில்லா வீடும் எனக்கு வேண்டா; தொண்டுக்காக மீண்டும் மீண்டும் பிறவி வேண்டும் என்பார் திரு.வி.க. அந்நிலையர் அற்றுப் போனார் அல்லர்; இன்றும் உளர் என்பது என் பட்டறிவுத் தெளிவு. ‘தொண்டலால் துணையும் இல்லை இறைமைக்கு’ என வாழ்ந்தவர் அப்பரடிகளாம் நாவுக்கரசர்! ‘என்கடன் பணி செய்து கிடப்பதே’ என்பது அவர்தம் சுடர்மொழி.

❀❀❀

33. தனிமை இனிமை

தனிமை பலரை வாட்டும்; தனிமைத் துயர் தாங்காமல் மனநோயர் ஆனாரும் இயற்கை எய்துதலை அவாவினாரும் உளர். ஆனால் 'தனிமை இனிமை' என்னும் செந்தண்மையர் - அந்தண்மையர் - உலகோம்ப உயிரோம்புநர் - இல்லாமல் இல்லை!

அவர்க்குத் தனிமை என்பது உலக நல - உயிர்நல - விளக்கமாக அமையும். உலகில் அவர்கள் வாழாமல் உலகே அவருள் வாழ ஆயவர் அவர். அத்தகையர் தனிமையே உலகப் பேரொளி விளக்கங்களாய் - படைப்புகளாய் - கண்டு பிடிப்புகளாய் - விளங்குகின்றன.

அச்சம் உடையவர்க்குத் தானே தனிமை நடுக்கமாம்; நலிவாம்! அச்சம் என்பதன் நிழல் தானும் நெருங்காதவர்க்குத் தனிமை துயராமா? காய், இலை தின்று வாழ்வார்க்குப் பசி என்ன, சுவை நாட்டமென்ன? தம் உடம்பும் மிகை என்னும் நிலையில் பற்றற்று அவாவறுத்தவர்க்குப் பிறர் தேவைதான் யாது?

வேண்டாமையே விழுச்செல்வமாகக் கொண்டவர்க்கு வேண்டுவதெது? புலனைந்தும் வென்ற மாவீரராம் அருக தேவர்க்குத் தனிமை என்பது தானே இனிமை!

புத்தர்தம் தனிமையின் இனிமையை, விலாப்புடைக்கப் புலால் உண்டு கொழுத்த பொங்கிகள் எவரேனும் அடைவரா?

கிறித்து பெருமான் சிலுவைப்பாடு கொள்ளுமுன் ஈராண்டு வாழ்வு எவர் கண்டார்? அவர் கண்ட பேரொளிப் பிழம்பை எவர் அறிவார்? நபிகள் நாயகத்தின் தனிமைப் பேறு அல்லவோ இனிமைமிக்க இசுலாத்தைக் கண்டது!

பொருளியல் மீட்பர் கார்ல் மார்க்சார் கும்பலோடு கும்பலாக இருந்தோ இருபத்தைந்தாயிரம் நூல்களை இருபத்தைந்தாண்டளவு ஓதி மூலதனம் தர வாய்த்தது!

வள்ளுவரும் வள்ளலாரும் தனிமையின் இனிமைத் தோய்வராய் இல்லாக் கால் வள்ளுவத்தையோ பொதுநிலை நெறியையோ (சன் மார்க்கம்) கண்டிருக்க இயலுமா?

காளிகோயில் பூசகர் அனைவரும் இராமகிருட்டிணர் ஆகமுடிந்ததா? சாக்கிரடீசர், உரூசோ, தால்சுதாய் என விளங்கியவர் அனைவரும் கூட்டத்தோடு கூட்டமாகத் திரிந்தவரா?

அமர்ந்தவுடன் கட்டையாகி விடும் நிலையில் தாயுமானவர் வாழ்வு கண்டமை எவர்க்கே வாய்க்கும்?

பாம்பும் புலியும் நோயும் பகையும் நெருங்கா நிலையர் தாமே தனிமையில் இனிமை எய்தியவர்!

அவர்க்கு இல்லறம் என்ன? துறவு என்ன? தூங்காமல் தூங்கி நலம் பெறும் அறிதுயிலர்க்குத் தனிமை அன்றி இனிமை எதுவோ? 'இனிது இனிது தனிமை இனிது' என்பது பாட்டி ஔவை மொழி!

❀❀❀

34. வீடு பேறு

வீடு இங்கே இருக்க, வீடு பேறு எங்கே இருக்கும்? வேறிடத்தா இருக்கும். இருக்கும் என்றால் விண்ணகம் பறந்தாரும் கண்ணகம் கொண்டு வந்து காட்டியிருப்பாரே!

கதை கதையாக வீடு பேற்றையும், நிரயத்தையும் கூறுகின்றனரே, அவர்கள் ஆங்காங்குச் சென்று கண்டுவந்து கூறியதா? கற்பனை செய்து கூறியதா?

கற்பகம், காமதேனு, சந்தானம், அரிசந்தானம், மேலேழ் உலகம், கீழேழ் உலகம் என்பவை எல்லாம் இட்டுக்கட்டிய ஈசாப்புக் கதைகள் போல் அன்றி மெய்ப்பிக்கக் கூடியவையா?

நாம் வாழும் வீடே – கண்கண்ட வீடு பேற்றிடம்! வாழும் போதே வீடு பேறு பெறாதவர் வீழ்ந்த பின்னரா பெறுவார்! பெற்றதைக் காணவோ காட்டவோ இயலுமா?

கயிலாயம் என்றார்கள்! காட்டியது எது? பனிமலைப் பகுதிதானே! வைகுண்டத்தைத் தாமரைக் கண்ணான் உலகு என்று கூறினர். தாம் விரும்பும் நல்ல மனைவியின் தோள்துயிலும் இன்பினும் இன்போ

தாமரைக் கண்ணான் உலகு என்று வினாவினார் திருவள்ளுவர். பாற்கடல், தயிர்க்கடல், அமிழ்து என்றெல்லாம் கூறினர்.

வானின் றுலகம் வழங்கி வரும் மழை நீரை அமிழ்து என்றவர் அத் திருவள்ளுவர்! இனிய மனைவியே இன்பத்தின் இன்பமாம் அமிழ்து! குழந்தைகள் குழைத்து ஊட்டும் உணவே அமிழ்தினும் உயர்ந்த அமிழ்து என்று குடும்பத்திலேயே அமிழ்தம் காட்டினார் திருவள்ளுவர். கடல் விளை அமிழ்து உப்பு என்றனர் முன்னையர். 'உப்பே' சுவைப் பொருள் ஆயது வள்ளுவத்தில்!

வீடாவது விடுதலை! வெளி உலகில் இருந்து விடுபட்ட இன்ப நிலையம் அமைதி நிலையம் வீடே என்பது தமிழர் நெறி.

வேண்டா வேண்டா என்று ஒவ்வொன்றாக விட்டுப் படிப்படியே பொறி புலன்கள் ஒடுங்கப் பெற்று முற்றிலும் அவாவறுத்த பற்றற்ற நிலையே பேரா இயற்கையாம் வீடு பேறு என்பதை வள்ளுவம் தெளிவாக நிலைப்படுத்தியது. அதுவே ஒடுக்க நிலை! இறைமை நிலையை 'ஒடுங்கி' என்றார் மெய்கண்டார். அவ்வொடுக்க நிலை உள்ளொளியே 'இலங்கம்' என்பதை, 'எல்லே இலக்கம்' என்று சான்றுடன் காட்டினார் தொல்காப்பியர். இலக்கம் – கதிரொளி! இலங்கம் பின்னே புனைவால் இலிங்கம் எனப்பட்டது. பொய்மை அற்ற மெய்ம்மையர் கண்ட வீடு பேறு, வீட்டிலேயே அமைவதாம்!

❀❀❀



ஆ. சாரதையார் - முனைவர் அ. ஆறுமுகனார் அறக்கட்டளை

பெற்றோர் உலகம், கணவன் மனைவி உலகம், மக்கள் உலகம், உற்றார் உறவு, சுற்றம் சூழல் உலகம் என்பவை வீட்டுலகம், அன்புலகம், அமைதி உலகம், இன்ப உலகம், விருந்துலகம், அடக்க உலகம், ஒழுக்க உலகம், ஒருமை உலகம், பொறுமை உலகம், உழைப்பு உலகம், உவகை உலகம் என்பவையும் வீட்டுலகமே!

- இரா. இளங்குமரனார்

The Printing House, Try-23. Ph : 2420121